# மித்ரா டைம்ஸ்

# MITRA TIMES


தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

ஆண்டு-2 Volume-2 | இதழ்-6 Issue-6 | நவம்பர்-2016 November-2016 | விலை ரூ.20/- Price Rs.20/- | ஆண்டு சந்தா ரூ.240/- Annual Subscription Rs.240/-




## முதலமைச்சர் உடல்நிலையில் முன்னேற்றம்!

- ஒரு சிறப்புத் தொகுப்பு

## வடிவேலு சொன்னதுக்கு அர்த்தம் இதுதானோ?



## கல்விச்சாலையா? தொழிற்சாலையா?

## உன்னால் முடியும் பெண்ணே!

- சாதனைப் பெண்மணி பஞ்சாயத்துத் தலைவி லிங்கம்மாள்



வேப்பிலை இனிக்கும் ஆலயம்
வேண்டும் வரம் அளிக்கும்
மத்தூர் ஸ்ரீ மகிஷாசுரமர்த்தி



## மீண்டும் தெற்கு தேய்கிறது!

- ஆசிரியர் கடிதம்

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

பக்தி, முக்தி மேலும் சக்தியின் உருவம் தான் கோமாதா!



## தானத்தில் சிறந்த தானம் பசுவிற்கு செய்யும் அன்னதானம் மட்டுமே!

# தனக்கென வாழாது நமக்கென வாழும் பசுக்களுக்கு புத்தாண்டு, மாட்டுப் பொங்கல், தங்களின் பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் உணவளித்து மகிழுங்கள்!

கோமாதாவின் பேரருளால் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து செல்வங்களும் கிடைத்திட மனதார பிராத்திக்கின்றோம். கடவுளின் படைப்பில் அவனுக்கு நிகரான படைப்பு என்றால், அது பசு மட்டும்தான். நமக்கு எல்லாவிதமான நன்மைகளையும், பயன்களையும் அளிக்கக்கூடிய சக்தி கோமாதாவில் மட்டும்தான் அடங்கி உள்ளது. இப்படி தனக்கென வாழாத பசுக்கள் இரக்கமின்றி கொல்லப்படுவதை தடுக்க **காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு** பசுமடம் என்ற காப்பகத்தை ஏற்படுத்தி கடந்த 18 ஆண்டுகளாக 120 பசுக்களுக்கு மேல் பராமரித்து வருகிறோம். கோயில்கள் மற்றும் மாட்டுச் சந்தைகளில் ஏலம் விடப்படும் வயதான பசுக்களை பெற்றும், கசாப்புக் கடைகளுக்கு செல்லும் பசுக்களை வாங்கியும் பராமரித்து வருகிறோம். இப்பசுக்களைப் பாதுகாக்க புத்தாண்டு, பொங்கல் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் தங்களால் முடிந்த நன்கொடைகளை தீவனம், பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்கு வழங்கி, இப்புனிதப் பணியான கோ-சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். தாங்கள் கோமாதாவிற்கு செய்யும் சேவை தங்களின் மாத்ரு, பித்ருக்களுக்கு செய்யும் சேவையாகும். பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் நீங்கள் உதவி செய்யலாம். பசுக்களை இறுதி காலம் வரை நிம்மதியாகவும், சுகமாகவும் வாழ வைப்பதும், பசுவதையை தடுத்து நிறுத்துவதும், மேலும், பசு வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே எங்களின் முக்கிய நோக்கமாகும்.

**பசுமடத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று 108 பசுக்களுக்கு பாராயணத்துடன் கோபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.**

## பசுமடத்தில் உள்ள வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்க...

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு **ரூ.200** அனுப்புவோருக்கு **கோபூஜை செய்த கோமாதா யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஒரு மாதத்திற்கு **ரூ.650** அனுப்புவோருக்கு **பித்தளையிலான பெருமாள் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க இரண்டு மாதத்திற்கு **ரூ.1,200** அனுப்புவோருக்கு **பித்தளையிலான லெட்சுமி குபேர விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஆறு மாதத்திற்கு **ரூ.3,750** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு **ரூ.500** அனுப்புவோருக்கு **பித்தளையிலான அஷ்டலெக்ஷ்மி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் புல் செலவு **ரூ.800** அனுப்புவோருக்கு **பித்தளையிலான சிவன்-பார்வதி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு **ரூ.1,250** அனுப்புவோருக்கு **பித்தளையிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம், யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு **ரூ.2,600** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான கோமாதா விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவச் செலவு **ரூ.2,900** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான துளசி மாடம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத அகத்தி கீரை செலவு **ரூ.4,300** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான தவழும் கண்ணன்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க **ரூ.6,600** அனுப்புவோருக்கு **ஒரிஜினல் வலம்புரி சங்கு** அனுப்பி வைக்கப்படும்

## குடும்பம் வாழையடி வாழையாக மகத்தான செல்வச் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும் திகழ கோதானம் செய்வீர்!

தாங்கள் விரும்பும் நாட்களில் **நாட்டுப் பசுவும் கன்றும் கோதானம் செய்ய ரூ. 12,500/-.** கோதானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், செய்வினை தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், நாகதோஷம் போன்ற 16 வகை தோஷங்கள் முற்றிலும் விலகும். மேலும் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கவும், கணவன்-மனைவி ஒற்றுமை நிலைக்கவும், புத்ர பாக்கியம் உண்டாகவும், தெய்வீக சக்திகள் பாதுகாப்புடன் சுகப்பிரசவம் நடைபெறவும், தடைப்பட்ட திருமணம் கைகூடவும் கோதானம் செய்வீர். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா மற்றும் மதுரா கிருஷ்ணர் விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்.



பசுமடத்தில் நடைபெறும் கோதானம்

## அனைத்து துன்பங்களும், துயரங்களும் நீங்கி நீண்ட ஆயுள் பெற காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்வீர்!



பசுமடத்தில் நடைபெறும் ரிஷபதானம்

தாங்கள் விரும்பும் நாட்களில் **காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்ய ரூ. 5,000/-.** ரிஷபதானம் செய்தால்... அனைத்து தடைகளும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், வியாபார தடைகள் அகல, வாகன விபத்தை தவிர்க்க, தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெற, தோல்விகள் அகல வெற்றிகள் குவிய, ராஜயோகம் அடைய, கற்ற கல்வியும் தேடிய செல்வமும் என்றும் நிலைத்திருக்க காளைகன்று தானம் செய்வீர். ரிஷபதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

## மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் நமது கஷ்டங்களை போக்கி இஷ்டங்களை கொடுக்கும் தேவதைகள் குடிகொள்ளும் கோடி தீப ஆராதனை

தங்களது இல்லங்களில் அமைதியும் ஆனந்தமும் நல்வாழ்வும், முன்னோர்கள், குல தெய்வ ஆசி வேண்டியும் மாட்டுத் தொழுவத்தில் கோடி தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்களின் முன்னோர்கள் நினைவாக அல்லது தங்களின் பிரார்தனைக்கேற்ப தாங்கள் விரும்பும் தேதியில் பசுமடத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் கோமாதாவிடம் பிரார்த்தனை செய்து தேவதைகள் குடிகொள்ளும் தீபம் ஏற்றப்படும். ஒரு நாள் தீபம் ஏற்றி வழிபட **ரூ. 300 அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான பசுவும் கன்றும் உள்ள விளக்கும், பிரசாதமும்** அனுப்பி வைக்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் ஒளி பெறுவோம்.



மாட்டுதொழுவத்தில் நடைபெறும் கோடி தீப ஆராதனை



## குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மாணவர்களின் கல்வியறிவு பெருகவும், அடிக்கடி வரும் நோய்களை தடுக்கவும், வீடு மற்றும் வியாபார ஸ்தலத்தில் கண் திஷ்டி நீங்கவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி கிடைக்கவும், ரியல் எஸ்டேட் மற்றும் பங்கு வியாபாரத்தில் யோகம் பெறவும், சொந்த வீடு வாங்கவும், பூர்வீக சொத்துக்கள் நிலைக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், கடன் பிரச்சனைகள் தீரவும், குடிப்பழக்கம், தீயபழக்கம், தீயசக்தியை நெருங்க விடாமல் தடுக்கவும் **ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மனக்கவலை மாற்றும் ஒரிஜினல் வலம்புரி சங்கு** ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

**தாங்கள் விரும்பும் நாட்களில் தங்கள் சார்பாக கோபூஜை, கோதானம், சங்கு பூஜை, தீப ஆராதனை செய்து தங்கள் சார்பாக அனைத்து பசுக்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும்**

## நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கான ரூ.365 ஐ கோமாதாவின் பராமரிப்பிற்கு அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான கோமாதா டாலர் மற்றும் கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்

பசுவின் ஆகாரத்திற்கும், கோதானத்திற்கும், கோடி தீப ஆராதனைக்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை **CHEQUE/DD/MO** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும் போது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு பிரசாதங்களும், பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் அனுப்பி வைக்கப்படும்.

**நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு**

# பசுமடம்

**(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)**

வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

**பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77.**

**OFF: 8754 555 555, MADAM: 8754 666 666 | www.shrigosala.com**



பசு மடத்தில் உள்ள வயதான பசுக்கள்

## ஆசிரியர் கடிதம்

**அன்புடையீர் வணக்கம்**

திரைப்படங்களில் கதாநாயகர்கள் பஞ்ச் டயலாக் பேசுவதை கேட்டிருக்கிறோம். ரஜினிகாந்த் "நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி" என்பதும்; விஜய் "ஒரு தடவை முடிவு பண்ணிட்டேன்னா என் பேச்சை நானே கேட்க மாட்டேன்" என்பதும், அஜித் ஏதாவது வசனத்தை பேசிவிட்டு முடிவில் "அது" என்பது போன்ற வசனங்கள் பிரபலம்.

சினிமாவைப் போலவே அரசியலிலும் பஞ்ச் டயலாக் பேசப்படுகிறது. அதில் தி.மு.க.வினர் வல்லவர்கள் என்றும் பெயர் பெற்றவர்கள். தி.மு.க.வை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா "அரியலூர் அளகேசா நீ ஆண்டது போதாதா! மக்கள் மாண்டது போதாதா?" என்று ரயில் விபத்தின்போது அப்போதைய மத்திய அமைச்சர் ஒ.வி.அளகேசனுக்கு எதிராகவும், "கூலி உயர்வு கேட்டு அத்தான், குண்டடிபட்டு செத்தான்" என்று விவசாயிகள் போராட்டத்தின்போது உயிர்நீத்தபோதும் பேசப்பட்ட வசனம். அந்த வகையில் அண்ணாவின் ஒரு வசனம் "வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது" என்பதாகும்.

என் எண்ணம்




- எம்.எஸ்.மூர்த்தி

# மீண்டும் தெற்கு தேய்கிறது!

முன்பெல்லாம் மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும்போது வடமாநிலங்களுக்கு அதிகமாகவும் தென்னிந்திய மாநிலங்களுக்கு குறைவாகவும் ஒதுக்கப்படுவதைக் குறிக்கும் வகையில் சொல்லப்பட்ட அச்சொற்றொடர் பின்னர் படிப்படியாக மறைந்துபோனது. குறிப்பாக மத்திய அரசில் நம்முடைய தமிழகத்தின் சார்பில் பங்கு பெறும் அமைச்சர்களின் செயல்பாடுகளால் அது மாறியது. காங்கிரஸ் ஆட்சியில் தொழிற்துறையின் அமைச்சராக இருந்து பின்னாளில் ஜனாதிபதியான தமிழகத்தைச் சேர்ந்த ஆர்.வெங்கட்ராமன் தமிழகத்திற்கு எண்ணற்ற தொழிற்சாலைகளை கொண்டு வந்தார். ராணிப்பேட்டை சிப்காட் வளாகம் அப்படி கொண்டு வரப்பட்டதுதான்.

மத்திய அமைச்சர்களாக தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் இடம்பெற்றது 2004-2014 ஆகிய 10 ஆண்டுகளில்தான். முரசொலிமாறன் தொழிற்துறை அமைச்சராக இருந்தபோதுதான் ஸ்ரீபெரும்புதூர் தொழிற்பேட்டையே அமைந்தது. டி.ஆர்.பாலு நெடுஞ் சாலைத்துறை அமைச்சராக இருந்தபோது மேம்பாலங்கள் தங்க நாற்கர சாலைகளை தமிழகம் கண்டது. ஏ.கே. மூர்த்தி ரெயில்வே இணை அமைச்சராக இருந்தபோதுதான் தமிழகத்தின் ரெயில் நிலையங்கள் பளிச்சென்றும் பளபளவென்றும் மாறியது. நடைமேடைகள் புதிதாக அமைக்கப்பட்டன.

முரசொலி மாறனுக்குப் பின் தயாநிதி மாறன், ஆ.ராசா பதவியேற்றனர். தயாநிதிமாறன் எடுத்த பெருமுயற்சி யினால் .OMR-ல் I.T. PARK என்று பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் அமைந்தது. பல இலட்சம்பேர் பணிபுரிகிறார்கள். ஆ.ராசாவின் முயற்சியால் சாமான்யனும் கைப்பேசி உபயோகிக்கவும், குறைந்த கட்டணத்தில் பேசவும் வாய்ப்பு கிடைத்தது ஆனால் தொலைத்தொடர்பு துறையில் 2ஜி ஊழல், தொலைபேசி இணைப்பு ஊழல், ஏர்செல் ஊழல் என்ற குற்றச்சாட்டினால் அவர்களின் சாதனைகள் வெளியே தெரியவில்லை. மேலும் அழகிரி, நெப்போலியன் ஜெகத்ரட்சகன் என பல அமைச்சர்கள் தமிழகத்தின் சார்பில் நியமிக்கப்பட்டபோதும் குறிப்பிட்ட மாதிரி சொல்லும்படி சாதனைகள் இல்லை. ஏ.கே. மூர்த்திக்கு பிறகு டாக்டர் ராமதாஸின் உறவினர் ஆர்.வேலு என்பவர் ரயில்வே இணை அமைச்சராக பொறுப்பேற்றார். ஏ.கே. மூர்த்தியின் செயல்பாடுகளால் திருப்தி அடைந்த பொதுமக்கள் மீண்டும் அவருக்கு அந்த வாய்ப்பை தராமல்






டாக்டர் ராமதாஸ் தனது சம்பந்தியான ஆர்.வேலுவுக்கு கொடுத்தது மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தியது. உண்மைத் தொண்டனான ஏ.கே.மூர்த்திக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதால் மட்டுமல்ல ஆர்.வேலுவின் செயலற்ற தன்மையும் மக்களுக்கு கசப்பை ஏற்படுத்தியது. ராமதாஸ் தமது குடும்பத்தை மட்டும் முன்னிறுத்துகிறார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது.

40 க்கு 40 எம்.பி.க்களை தி.மு.க. கூட்டணி கைப்பற்றியபோது, மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு தி.மு.க.வின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்தது. தில்லி தலைநகரிலுள்ள ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் கட்சியின் முன்னணித் தலைவர்கள் சென்னையிலுள்ள கலைஞரின் கோபாலபுரம் வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்றனர். திட்டங்களும் அதிகம் தமிழகத்திற்கு வர ஆரம்பித்தது. கோடிக்கணக்கில் முதலீடும் கிடைத்தது.

ஆனால் 2014ல் பி.ஜே.பி. அரசு மோடி தலைமையில் ஏற்பட்ட பிறகு மீண்டும் தமிழகம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ரயில்வே பட்ஜெட்டில் ஒதுக்கீடே இல்லை என்பது மட்டுமல்ல. இலங்கைத் தமிழர் பிரச்சனை, முல்லைப்பெரியாறு, காவிரி, ஜல்லிக்கட்டு ஆகிய எந்தப் பிரச்சனையானாலும் அதில் மத்திய அரசு தமிழக மக்கள் மீது விரோதப் போக்கையே கடைபிடிக்கிறது. கர்நாடகத்தில் உள்ள மத்திய அமைச்சர் காவிரிப் பிரச்சனையில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டபிறகும் தண்ணீர் தர மறுக்கும் குழுவினரோடு இணைந்து மாநில நலனில் அக்கறை செலுத்துகிறார். காவிரி மேலாண்மை வாரியம் அமைப்போம் என்று சொன்ன மத்திய அரசு மறு வாரமே அது சாத்தியமில்லை என்கிறது.

தமிழகத்தில் உள்ள ஒரே ஒரு பி.ஜே.பி. மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் அந்த அளவிற்கு வேகம் காட்டாதது மட்டுமல்ல. அவரால் தமிழகத்திற்கு எந்த பிரயோஜனமும் இல்லை. விமான நிலையத்தில் பேட்டி கொடுப்பதோடு சரி. "காங்கிரஸ் தனித்து நிற்பது வரவேற்க தக்கது" என்று சம்மந்தமில்லாத பேட்டி வேறு.


எனவேதான் அண்ணா அன்று சொன்ன "வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது" என்ற வசனத்தை சற்று மாற்றி "டெல்லி வஞ்சிக்கிறது. தமிழகம் தத்தளிக்கிறது" என்று சொல்லலாம்.

முதலமைச்சர் ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்தபோது ஜாதி, கட்சி, இன, மொழி பேதமின்றி அவரை சென்று பார்க்கும் அனைவரும் முதலமைச்சர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் துணை நின்றால் மட்டுமே, இதற்கு தீர்வு கிடைக்கும் என்று நம்பலாம். வருமா அந்த வசந்தகாலம்?

- ஆசிரியர்







# உள்ளே...


உன்னால் முடியும் பெண்ணே....................................6

அமெரிக்க அதிபர் தேர்தலில்
புகுந்த இந்திய அரசியல்........................................8

கண்ணதாசன் சிந்தனைகள்....................................10

புகைப்பிடிக்காவிட்டாலும் நுரையீரல் பாதிக்குமா....12

ஆறிலிருந்து அறுபது வரை.....................................13

நஞ்சற்ற உணவே நோயற்ற வாழ்வு........................14

இயற்கை வழியில் அழகு.........................................15

நவம்பர் மாத ராசிப்பலன்கள்...................................16

வேண்டும் வரம் தரும் மத்தூர் அம்மன் .................18

கோபால் நாயக்கரின் “பழனி சதித்திட்டம்”.............20

மித்ரா சினி கோலிவுட்...........................................22

மொழியின் வரலாறு...............................................24

கோவையின் சிறப்பு...............................................25

முதலமைச்சரின் உடல்நிலை
**ஒரு சிறப்பு தொகுப்பு**...........................................26

தோல்வி தந்த வெற்றி-ஹோண்டா..........................30

MIND AND BODY PRACTICE...............................32

பசுவின் சிறப்பம்சங்கள்..........................................34

பதிவின்போது பட்டாவுக்கும் சேர்த்தே
விண்ணப்பிக்க வேண்டும்.......................................36

கல்விச்சாலையா? தொழிற்சாலையா?.....................38

**எம்**-பதில்கள்...........................................................40

கிருஷ்ணா நதி.......................................................42

நலமுடன் வாழ.......................................................43

வடிவேலு சொன்னதுக்கு அர்த்தம் இதுதானோ?.....44

குழந்தை வளர்ப்புத் தொடர்....................................45

அற்புத மூலிகைகளின் மலை
(சுற்றுலாத்தளங்கள்)..............................................46

கபாலிகான்.............................................................48


**ஐப்பசி மாத அன்ன அபிஷேகம்**..............................50











# உன்னால் முடியும் பெண்ணே!

முதலமைச்சர் ஜெயலலிதா உள்ளாட்சி அமைப்பில் 50% பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளித்து உத்தரவிட்டார். ஆனால் தேர்தல் நடக்கவில்லை. தேர்தல் நடந்திருந்தால், ஏறத்தாழ ஒரு லட்சம் பெண்கள் உள்ளாட்சி அமைப்பில் இடம் பெற்றிருப்பார்கள்.

“A women behind the success of everh Mann” என்று ஒரு ஆங்கிலப் பழமொழி சொல்லுகிறது. இதன் பொருள். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் இருப்பாள் என்பதுதான். ஆனால் ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின் ஒரு ஆணும் இருக்கிறார். அதுவும் தான் வகித்த பதிவியையே தனக்கு பின்னால் தன் மனைவியையும் பொறுப்பேற்க செய்து அதில் அவரை வெற்றி பெறவும் வைக்கிறார்.



1996 முதல் 2006 வரை கோவை மாவட்டம் ஓடந்துறை கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக இருந்தவர் சண்முகம். 2006 லிருந்து 2014 வரை அவரது மனைவி லிங்கம்மாள் தலைவராக நின்று சாதனைப் புரிந்திருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு அனைத்து கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களையும் திரட்டி ஓடந்துறை கிராமத்துக்கு அனுப்பியது. அனைவருக்கும் உள்ளாட்சி நிர்வாகம் குறித்து லிங்கம்மாளும் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவரும் அவரது கணவருமான சண்முகமும் பாடம் எடுத்திருக்கிறார்கள். அன்றைய தினம் மட்டும் வசூலான பார்வையாளர் கட்டணம் ரூ.1,65,000. ஒரு கிராமப் பஞ்சாயத்து தனது வரிகளை 100 % வசூலித்தால் தமிழக அரசு அதற்கு இணையாக மூன்று மடங்கு ஊக்கத் தொகை வழங்குகிறது. ஊர் மக்களிடம் பேசினார் லிங்கம்மாள். அரசுக்கு முழுமையாக வரி செலுத்த வேண்டிய அவசியத்தை விளக்கினார். சிறப்பு முகாம்கள் நடத்தினார். வீட்டு வரி, கடை வரி, குடிநீர் வரி, தொழில் வரி, வரைபட அங்கீகாரக் கட்டணம் என்று 100 % வரியை வசூலித்தார். ரூ.20 ஆயிரமாக இருந்த வரி வருவாய் ரூ.1.75 லட்சமாக உயர்ந்தது. அதற்கு ஈடாக ரூ.5.25 லட்சம் ஊக்கத் தொகை பெற்றார். மறுஆண்டு 3.5 லட்சம் வரி வசூலித்தார். ஈடாக 10.5 லட்சம் ஊக்கத் தொகை பெற்றார். சரி, இந்தத் தொகையை எல்லாம் என்ன செய்கிறார்கள்?

“எங்க கிராமத்துல யாரும் வெளியே வட்டிக்கு கடன் வாங்குறதில்லைங்க. கிராமத்துல இருக்குற ஒவ்வொரு வாக்காளருக்கும் கிராமப் பஞ் சாயத்தே கடன் வழங்குது. ஒரு ரூபா வட்டிங்க. கடன் பெறுவதற்கு ரெண்டு தகுதி வேணுமுங்க. தகுந்த காரணம் இருக்கோணும். பழைய பாக்கி இருக்கக் கூடாது. மருத்துவச் செலவு, பிரசவச் செலவு, கல்விக் கட்டணம், சிறு கடை வைக்க கடன்

**– சாதனைப் பெண்மணி பஞ்சாயத்துத் தலைவி லிங்கம்மாள்**

தர்றோமுங்க. கல்யாணம், காது குத்து, நல்லது, கெட்டதுகளுக்கும் கடன் உண்டுங்க. ஆயிரம் ரூபாய் தொடங்கி 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கொடுத்திருக்கோம்” என்கிறார். கொடுக்கும் தொகைக்கு எழுதி வாங்குவது கிடையாது. சரியான காரணமாக இருந்தால் உடனே பணம் தருகிறார்கள். பதிவேட்டில் தவணைத் தொகை வரவு வைக்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளாக நடந்துவரும் இந்தத் திட்டத்தில் வராக்கடன் என்கிற பேச்சுக்கே இடம் இல்லை.

இங்கிருக்கும் பழங்குடியினர் காலம் காலமாக தனியார் தோட் டங்களில் கொத்தடிமைகள் போல இருந்திருக்கிறார்கள். அவர்களுக் கென நிரந்தர வசிப்பிடம் கிடை யாது. அவர்களுக்கு தனியார் தோட்ட முதலாளிகளிடம் போராடி நிலத்தைப் பெற்று வீடுகள் கட்டிக்கொடுத் திருக்கிறார் லிங்கம்மாள். தனியார் தோட்ட நிறுவனங்களிடம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக தரிசு நிலம் இருந்தால் அதனை அந்த கிராமப் பஞ்சாயத்து கையகப்படுத்திக் கொள்ளலாம். இதனை அறிந்த லிங்கம்மாள் ஆறு ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தினார். முதலாளிகள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அவற்றையும் எதிர்கொண்டு வெற்றி பெற்றார் லிங்கம்மாள். அங்கு பழங்குடி யினருக்கு 250 வீடுகள் கட்டிக்கொடுக் கப்பட்டன.

இவை தவிர வினோபாஜி நகரில் 101 பசுமை வீடுகள் சோலார் மின் தொழில்நுட்பத்துடன் கட்டிக்கொடுக் கப்பட்டுள்ளன. ஒரே இடத்தில் 101 பசுமை வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டிருக்கும் தமிழகத்தின் ஒரே பஞ்சாயத்து ஓடந்துறை மட்டுமே. இதிலும் ஒரு சிறப்பு உண்டு. தமிழகம் முழுவதுமே பசுமை வீடு கள் கட்டிக்கொடுக்கப்பட்டு வரு கின்றன. ஆனால், அதில் பயன்பெற அடிப்படை தகுதியாக சொந்த நிலம் வைத்திருக்க வேண்டும். இங்கு நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்துடன் வீட்டை சொந்தமாக்கிக் கொடுத் திருக்கிறார் லிங்கம்மாள். இங்கே அரசுக்கு சொந்தமான பூமிதான நிலம் 3.22 ஏக்கர் இருந்திருக்கிறது. வருவாய் துறையிடம் பேசியவர், கிராம சபை தீர்மானம் மூலம் கிராமப் பஞ்சாயத்துக்கு அந்த நிலத்தை மாற்றியவர், அங்கு வீடுகளை கட்டியிருக்கிறார். “கிராமத்துல இருக் குற மொத்தப் பேருக்குமே சொந்த வீடு இருக்கு. அதுல பாதி வீடுகள் அரசாங்க வீடுங்க. வாடகை வீடுங்கிற கலாச்சாரமே இங்கே



**உள்ளாட்சியை பார்வையிட வந்த உலக வங்கி நிர்வாகிகள்**

கெடையாதுங்க” என்கிறார் லிங்கம்மாள். இவை மட்டுமல்ல... 100% மாணவர்கள் கல்வி பெறுகிறார்கள். இடை நின்ற மாணவர் ஒருவர்கூட கிடையாது. மின்சாரத்தை மிச்சப்படுத்தும் சோலார் தெருவிளக்குகள், எல்.இ.டி. விளக்குகள் ஜொலிக்கின்றன. ஒவ்வொரு வீட்டுக்கும் சுத்திகரிக்கப் பட்ட குடிநீர் கிடைக்கிறது. தூய்மையாக பளிச்சிடுகின்றன தெருக்கள். இதற்காக மத்திய, மாநில மற்றும் உலக நாடுகள் அளித்திருக்கும் விருதுகள் கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்தை அலங்கரிக்கின்றன. வாஷிங்டனிலிருந்து உலக வங்கி இயக்குநர் தலைமையிலான குழு ஓடந்துறையை ஆய்வு செய்திருக்கிறது. ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய வளர்ந்த நாடுகளின் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இங்கே வந்து பாடம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**தனது கிராமத்தில் மின் உற்பத்தி ஏற்படுத்தி 21.5 இலட்சம் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து ஆண்டுதோறும் மின் வாரியத்திற்கு விற்பனை செய்து 65 இலட்ச ரூபாய் ஈட்டுகிறார்கள்.**

உலகமே வியந்து பாராட்டும் லிங்கம்மாளை தமிழக அரசும், தமிழக மக்களும் உரிய அங்கீகாரம் தந்து பாராட்ட வேண்டும். மகளிர் அமைப்புகளும், மகளிர் சுய உதவிக் குழுக்களும் அவரின் சாதனைகளை ஊருக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டாட வேண்டும். உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு வென்று ஊருக்கு நன்மை செய்ய நினைக்கும் பெண்களின் முன்னோடி லிங்கம்மாள்!

**– திருமதி. சுஜாதா மூர்த்தி**

# அமெரிக்க அதிபர் தேர்தலில் புகுந்த இந்திய அரசியல்

நவம்பர் 9ந் தேதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளிண்டனும் குடியரசுக் கட்சி சார்பில் டொனால்டு டிரம்பும் போட்டியிருக்கின்றனர். தேர்தல் பிரச்சாரக் களத்தில் நடைபெறும் சம்பவங்கள் நமது இந்திய அரசியலை நினைவூட்டுகிறது. தேர்தலின்போது இந்தியாவில் நடைபெறும் அனல் பறக்கும் பிரச்சாரம், தனிநபர் விமர்சனங்கள் அப்படியே அமெரிக்க அதிபர் தேர்தலையும் ஆக்கிரமித்துள்ளது.



சில வருடங்களுக்கு முன்பு ஹிலாரி கிளிண்டன் தமிழகத்திற்கு வந்து முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து சென்றுள்ளார். சமீபத்தில் சட்டசபையில் பேசிய ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவர் 'அம்மாவை பார்த்து சென்ற பின்புதான் அதிபர் தேர்தலில் போட்டியிடும் தைரியமே ஹிலாரி கிளிண்டனுக்கு வந்தது' என்று பேசியபோது சபையில் ஆளுங்கட்சி யினரே கூச்சத்தால் நெளிந்தனர். ஒபாமாவின் ஆதரவு ஹிலாரிக்கு இருப்பதால் அவருக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

அமெரிக்காவில் 20 லட்சம் இந்தியர்கள் வாழ்கிறார்கள். இவர்களின் வாக்கு அதிபர் தேர்தலின் முடிவின் போக்கையே மாற்றிவிடும். டொனால்டு டிரம்ப் ஆரம்பத்தில் "அதிபராக நான் பதவியேற்றால் அமெரிக்காவில் சட்டத்திற்கு புறம்பாக குடியேறியுள்ளவர்களையும், வெளிநாட்டவரையும், வந்தேறிகளையும் அமெரிக்காவை விட்டு விரட்டி அடிப்பேன். எங்கள் நாட்டு வேலைவாய்ப்புகளை இந்தியர்கள் பறித்து சென்று விடுகிறார்கள்." என்று பரபரப்பாக பேசினார்.

ஆனால், தேர்தலுக்கு 20 நாட்களே இருக்கும் நிலையில், அமெரிக்க வாழ் இந்தியர்களை தாஜா செய்யும் வகையில் அவர்கள் ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் "அமெரிக்க அதிபராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவேன். இந்திய பிரதமர் நரேந்திர மோடி நல்ல நிர்வாகி. இந்தியா மீது எனக்கு உயர்ந்த நம்பிக்கை உண்டு. எனது நண்பர்கள் நிறைய பேர் இந்தியாவில் உள்ளனர். நான் இந்து மக்கள் மற்றும் இந்தியர்களின் விசிறி" என்றும் பேசியுள்ளார்.

இஸ்லாமியர்களுக்கு எதிராக கருத்துக்களைக் கூறியதால், "உலகின் ரட்சகர் டிரம்ப்" என்று டெல்லியில் உள்ள இந்து அமைப்புகள் கேக் வெட்டிக் கொண்டாடினார்கள். ஆனால்,



பெண்களுக்கு எதிராகப் பேசியதால், அமெரிக்கப் பெண்கள் அவருக்கு எதிராக கண்ணாடிகளை மட்டுமே கொண்டு உடலை அரைகுறையாக மறைத்தபடி போராட்டம் நடத்தினார்கள். இதுபோன்ற பரபரப்பான சர்ச்சைகளில் டிரம்ப் சிக்கி வருகிறார்.

அதே நேரத்தில் அமெரிக்காவில் தேர்தலின்போது, வழக்கமாக நடைபெறும் வேட்பாளர்களின் பொது விவாத நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த டிரம்ப், ஹிலாரி இருவரும் ஒருவருக்கொருவர் கைக்குலுக்கிக் கொள்ளாமல் ஒதுங்கிச் செல்வதை அமெரிக்க வாக்காளர்கள் தங்கள் மனதில் குறித்துக் கொண்டார்கள். விவாத முடிவில் ஹிலாரிக்கு 52 சதவீதமும், டிரம்ப்புக்கு 39 சதவீத வாக்குகளும் கிடைத்தது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் இந்தியர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி விட்டது. அதன் எதிரொலி நவம்பர் 9ந் தேதி தெரிந்துவிடும்.



டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்தியாவிலுள்ள இந்து அமைப்புகள் கொண்டாடக் கூடும். ஹிலாரி ஜெயித்து விட்டால், “அம்மாவின் ஆசியோடு வெற்றி பெற்றார்” என்று தமிழகத்தில் உள்ள அ.தி.மு.க.வினர் கொண்டாடக்கூடும்.

**அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா...!**

**● - கி. விடாரண்யம்**

# எது அழகு?



- எரிவதில் தீபம் அழகானது...!!!
- சுடுவதில் சூரியன் அழகானது...!!!
- சுற்றுவதில் புவி அழகானது...!!!
- வளர்வதில் பிறை அழகானது...!!!
- மின்னுவதில் விண்மீன் அழகானது...!!!
- தவழ்வதில் குழந்தை அழகானது...!!!
- நடப்பதில் நதி அழகானது...!!!
- குதிப்பதில் கடல் நீர் அழகானது...!!!
- விழுவதில்அருவி அழகானது...!!!
- உறைவதில் பனி அழகானது...!!!
- விளைவதில் பயிர்கள் அழகானது...!!!
- தலை சாய்ப்பதில் நெற்கதிர் அழகானது...!!!
- குளிர்ச்சியில் தென்றல் அழகானது...!!!
- உழைப்பதில் வியர்வை அழகானது...!!!
- பாடுவதில் குயில் அழகானது...!!!
- பறப்பதில் புறா அழகானது...!!!
- அறுபத்து நான்கு கலைகளும் அழகானது...!!!
- காதலில் புரிதல் அழகானது...!!!
- உறவினில் நட்பு அழகானது...!!!
- மொழிகளில் மழலை மொழி அழகானது...!!!
- எப்போதும் தாய்மை அழகானது...!!!

படித்ததில் பிடித்தது

# நல்ல மனைவியைப் போல நல்ல நண்பனும் அமைய வேண்டும்!

## எக்காலத்துக்கும் பொருந்தும் கண்ணதாசன் சிந்தனைகள்

கண்ணதாசன் பாடல்களின் சிறப்பை அறிந்திருக்கிறோம். அவரின் கட்டுரைகளும், கவிதைகளும் வசனங்களும் அதைப்போலவே சிறப்புடையவை. அவர் எழுதிய புத்தகங்களை படிக்க... படிக்க நமக்குள் ஒரு ஞானம், தெளிவு பிறக்கும். அப்படி நான் படித்ததில் எனக்கு பிடித்ததை உங்களோடும் பகிர்ந்து கொள்கிறேன்.

நல்ல மனைவியைத் தேர்ந்தெடுப்பது போலவே, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.

உன் எதிரியை நீ சுலபமாக அடையாளம் கண்டு கொண்டுவிட முடியும்.

ஆனால், நண்பர்களிலே, நல்ல நண்பர் யார் என்பது அனுபவத்தின் மூலமேதான் தெரியுமே தவிர, சாதாரண அறிவினால் கண்டுகொள்ள முடியாது.

முகத்துக்கு நேரே சிரிப்பவன்,
முகஸ்துதி செய்பவன்,
கூனிக் குழைபவன்
கூழைப் கும்பிடு போடுபவன்,

-இவனெல்லாம் நல்ல நண்பன் மாதிரியே தோற்றமளிப்பான். எந்த நேரத்தில் அவன் உன்னைக் கவிழ்ப்பான் என்பது அவனுக்கும் கடவுளுக்கும் மட்டுமே தெரியும்.

ஆகவே ஒருவனை நண்பனாக்கிக் கொள்ளுமுன், அவனைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சரியாகத் தெரிந்த பின்புதான், அவனிடம் ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

நன்றாக ஆராய்ந்து, 'இவன் நல்லவன்தான்' என்று கண்டபின், ஒருவனை நண்பனாக்கிக் கொண்டு விட்டால், பிறகு அவன்மேல் சந்தேகப்படக்கூடாது.

"அவசரத்தில் ஒருவனை நம்பிவிடுவதும், நம்பிக்கைக்குரியவன் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனைச் சந்தேகிப்பதும், தீராத துயரத்தைத் தரும்" என்றான் வள்ளுவன்.

**"தேரான் தெளிவும் தெறிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்."**

சரி, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

யாரோடு நீ பழக ஆரம்பிக்கின்றாயோ, அவனோடு நீ இனிமையாகப் பழக வேண்டும்.

கொஞ்ச காலத்திற்கு அதை, நீ நட்பாகக் கருதக் கூடாது.

வெறும் பழக்கமாகத்தான் கருதவேண்டும். உனக்குக் கஷ்டம் வந்தபோது அவன் கை கொடுத்தால், உன்னைப்பற்றி நல்லவிதமாக, நீ இல்லாத இடத்தில் அவன் பேசுவதைக் கேள்விப்பட்டால், பிறர் உன்னைப்பற்றித் தவறாகப் பேசும்போது, அவன் தடுத்துப் பேசியதாக அறிந்தால், அவனை நீ நம்பத் தொடங்கலாம்.

தொடர்ந்து இது போன்ற பல செய்திகளைக் கேள்விப்பட்ட பிறகுதான், அவனை நண்பனாக நீ வரித்துக் கொள்ள வேண்டும்.

பல இடங்களில் ஒரே மாதிரி ஒருவன் நடிக்க முடியாது. ஆகவே, உன்மீது அவன் வைக்கும் அன்பும் உண்மையாகத்தான் இருக்க முடியும்.



நட்பு என்பது வெறும் முகஸ்துதி அல்ல. ஆபத்தில் உதவுவது ஒன்றே நட்பு.

நீ அழும்போது உண்மையிலேயே அவனுக்கும் அழுகை வருகிறது என்றால், அதுதான் நட்பு.

*“முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து*
*அகநக நட்பது நட்பு.”*

*“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு”.*

என்றான் வள்ளுவன்.

நண்பர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறது ஒரு பழம் பாடல். பாடல் மறந்துபோய் விட்டது. விளக்கம் இதுதான். ஒன்று, பனைமரம் போன்ற நண்பர்கள்; இரண்டு, தென்னைமரம் போன்றவர்கள்; மூன்று வாழை மரம் போன்றவர்கள்.

பனைமரம் யாராலும் நட்டுவைக்கப் பட்டதல்ல. பனம்பழத்தைத் தேடி எடுத்து யாரும் புதைப்பதில்லை. அது தானாகவே முளைக்கிறது. தனக்குக் கிடைத்த தண்ணீரைக் குடித்துத் தானாகவே வளர்கிறது. தனது உடம்பையும், ஓலையையும் நுங்கையும் அது உலகத்திற்கு தருகிறது. நம்மிடம் எந்த உதவியையும் எதிர்பாராமல், நமக்கு உதவுகிறவன், பனைமரம் போன்ற நண்பன்.

தென்னைமரம் நம்மால் நடப்படுகிறது. அதற்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றி வளர்த்தால்தான் அது நமக்குப் பலன் தருகிறது. அதுபோல், நம்மிடம் அவ்வப்போது உதவி பெற்றுக் கொண்டு நண்பனாக இருக்கிறவன், தென்னை மரத்துக்கு இணையான நண்பன்.

வாழை மரமோ, நாம் தினமும் தண்ணீர் ஊற்றிக் கவனித்தால்தான் நமக்கு பலன் தருகிறது. அதுபோல் தினமும் நம்மிடம் உதவி பெற்றுக் கொள்கிறவன் வாழைமரம் போன்ற நண்பன்.

இந்த மூவரில், பனைமரம் போன்ற நண்பனே நீ தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய நண்பன்.

எனக்கு அப்படிப்பட்ட நண்பர்கள் சிலர் கிடைத்தார்கள். எனக்கு கிடைத்த நண்பர்களில் நூற்றுக்கு ஒருவர் இருவரே அப்படிப்பட்ட நண்பர்களாக இருந்தார்கள் என்பது பொருந்தும்.

நல்ல மனைவியை எப்படி இறைவன் அருளுகிறானோ, அப்படியே நல்ல நண்பர்களை அருளுமாறு இறைவனைப் பிரார்த்திப்பது நல்லது.

எம்.எஸ்.எம்.

# கற்பக விருட்சம்

தேவலோகத்தில் இருக்கும் மரம்தான் கற்பக விருட்சம். இந்து சமயத்தில் கற்பக மரத்தின் கீழே நின்று கொண்டு என்ன வேண்டும் என்று நினைத்தாலும் அது உடனே கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சக்தி தேவி நமக்கு வேண்டியதை தந்து அருள்பாவிப்பது போல் பாற்கடலில் தோன்றிய மரம் வேண்டியதை தரும் தெய்வ அம்சம் கொண்டது .

தேவர்கள் அனைவரும் அமிர்தம் வேண்டி, பாம்பைக் கயிறாகவும், மகாமேரு மலையை மத்தாகவும் பயன்படுத்தி பாற்கடலை ஆழமாக கடைந்து கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு அற்புதம் நடந்தது.பாற்கடலிருந்து 16 வகையான பொருட்கள் வெளி வந்தன. அப்படி தோன்றிய பொருள் வலம்புரி சங்கையும், மகா லக்ஷ்மியையும் தன்னுடன் சேர்த்து கொண்டனர்.

திரவியம், பொன், மாணிக்கம், சிந்தாமணிகள் என பல பொருட்கள் வெளிவந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைக்கு சென்று விட்டன.இதை தொடர்ந்து பச்சை நிற மரக்கிளை போல பாசி கற்றைகள் பின்னியது போல ஒரு உருவம் நீரில் மிதந்து வந்தது. அந்த மரம் போன்ற உருவத்தின் நடுவில் ரத்தினங்களால் அலங்காரம் செய்யப்பட்ட ஒரு அழகிய தேவி பொற்காசுகளுடன் மகாலக்ஷ்மி போன்று நின்று கொண்டிருந்தாள். அவளே ஸ்வர்ண வர்ஷினி ஆவாள்.

அந்த மரம் குபேர திசையான வடக்கு திசை நோக்கி சென்றது. கேட்டதை தரும் சக்தி நிறைந்த மரம் கற்பக விருட்ச மரம்.





# புகை பிடிக்காவிட்டாலும் நுரையீரல் பாதிக்குமா?

நான் புகை பிடிப்பதில்லை. ஆனால் எனக்கு நுரையீரல் பாதிப்பு வந்து விட்டது" என்று கவலைப்படுபவர்கள் உண்டு. புகை பிடிப்பவர்கள் அல்லாமல் மற்றவர்களுக்கு அலர்ஜி, சுற்றுப்புற சூழ்நிலை, தூசுகளினால் நுரையீரல் அழற்சி ஏற்படுவதுண்டு. அதே சமயம் 45 வருடமாக புகை பிடித்தாலும் எந்த பாதிப்பு இல்லாமல் நுரையீரல் நன்றாக இயங்குபவர்களும் உண்டு. இது ஆளாளுக்கு வித்தியாசப்படலாம். எவ்வாறு இருப்பினும், இப்பொழுது மூன்று நாட்களில் நுரையீரல் சுத்தம் செய்வது என்று பார்ப்போம்.

இதை செய்வதற்கு இரண்டு நாட்கள் முன்பே எல்லா பால் பொருட்கள் சாப்பிடுவதை நிறுத்தி விட வேண்டும். உதாரணத்திறக்கு பால், தேநீர், தயிர், மோர், வெண்னெய், சீஸ் போன்றவை. உடலிருந்து நச்சுகளை நீக்க வேண்டியது அவசியம். எனவே தவறாது இதை கடைபிடிக்க வேண்டும்.

சுத்தம் செய்வதற்கு முந்தைய நாள் இரவு ஒரு கப் மூலிகை தேநீரை குடிக்கவும். இது குடலில் இருந்து நச்சுகளை வெளியேற்ற உதவும். சுத்தம் செய்ய நுரையீரலுக்கும், உடலுக்கும் ஒய்வு தேவை. எனவே கடுமையான பயிற்சிகள், வேலைகளை செய்ய வேண்டாம்.

முதல் நாள்: இரண்டு எலுமிச்சை பழங்களின் சாற்றை 300 மில்லி தண்ணீரில் கலந்து காலை உணவுக்கு முன்பு குடிக்கவும்.

ஒரு மணி நேர இடைவெளிக்கு பிறகு 300 மில்லி சுத்தமான கிரேப் புரூட் சாற்றை குடிக்கவும். இதன் சுவை பிடிக்காவிட்டால் கிரேப்புரூட் சாற்றுக்கு பதிலாக பைனாப்பிள் சாற்றை குடிக்கலாம். எல்லாம் சுத்தமான தண்ணீர், சர்க்கரை கலக்காத சாறாக இருக்க வேண்டும். இந்த சாறுகளில் இயற்கையான சுவாசத்தை சீராக்கும் ஆன்டிஆக்ஸிடன்டஸ் நிறைந்துள்ளதால் நமது நுரையீரலுக்கு நன்மை பயக்கும்.

மதிய உணவிற்கு முன்பாக 300 மில்லி சுத்தமான கேரட் சாற்றை பருகவும். இதில் தண்ணீரோ சர்க்கரையோ சேர்க்கக்கூடாது. கேரட் சாறு சுத்தம் செய்யும் மூன்று நாட்களும் இரத்தத்தை அமில நிலையிலிருந்து காரத்தன்மைக்கு மாற்றுகிறது.

இரவு படுக்கபோகும் முன்பு 400 மில்லி பொட்டாசியம் நிறைந்த கிரேன்பெரி போன்ற சாற்றை குடிக்க வேண்டும். பொட்டாசியம் சுத்தம் செய்ய ஒரு டானிக்காக உதவுகிறது. இது உடலின் உள்ளுறுப்புகளில் முக்கியமாக சிறுநீர்பாதை, நுரையீரல் தொற்றுகளை உண்டாக்கும் பாக்டீரியாக்களை நீக்குகின்றது. கிரேன்பெரி கிடைக்காதவர்கள் சுத்தமான சிகப்பு திராட்சை அல்லது பைனாப்பிள், ஆரஞ்சு சாற்றை கலப்பிடமில்லாமல் குடிக்கலாம். இதை மூன்று நாட்கள் கடைபிடிக்கும் போது எளிதில் ஜீரணிக்ககூடிய உணவுகளை சாப்பிட வேண்டும். குறைந்தது 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்து வேர்வையை வெளியேற்றவும். அல்லது 20 நிமிடங்களில் சுடுதண்ணீரில் குளிக்கலாம். வியர்வை வெளியேறும்போது நச்சுகளும் வெளியேறும்.

இரவில் கொதிநீர் ஆவி பிடிக்கவேண்டும். 5 முதல் 10 சொட்டுவரை யூகலிப்ட்டஸ் ஆயில் கொதிநீரில் சேர்த்து தலையினை சுத்தமான போர்வையைக்கொண்டு மூடி ஆவியை நன்றாக உள்ளுக்குள் இழுத்து சுவாசிக்கவும். இவ்வாறு கொதிநீர் ஆறும்வரை ஆவி பிடிக்கவும்.

மூன்று நாட்கள் இவ்வாறு கடைபிடிக்கவும். ஆஸ்த்துமா, நுரையீரல் அழற்ச்சி, சைனஸ் தொல்லை உள்ளவர்களுக்கும் நல்ல பலனை அளிக்கும்

இம்மாதம் 23ம் தேதி சாய் பாபாவின் பிறந்தநாள் அனைத்து பாபா திருவாலயங்களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.அவரின் யோகி வாழ்க்கையானது மக்களின் ஆசை, பற்று அனைத்தையும் கடந்து நின்று இன்றும் உயர்ந்து நிற்கிறது.





# ஆறிலிருந்து அறுபது வரை

## அப்பாவும் நானும்

எனக்கு 6 வயதாக இருக்கும்போது எங்கப்பாவைப்போல் யாருமில்லை; அவரை எல்லோரும் வந்து பார்க்கிறார்கள். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளார். போகிற வருகிறவர்கள் எல்லாம் 'வணக்கங்க' என்று மரியாதை கொடுக்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சி.

என் 10 வயதில் எனக்கு அப்பா ஏன் அடிக்கடி கோபப்படுகிறார்னு தெரியாம, புரியாம இருந்தது. என் 12 வயதில் என் அப்பா படிச்சியா! ஊர் சுற்றாதே! என்றெல்லாம் ஏகப்பட்ட கண்டிஷன் போடராறேன்னு நினச்சு சின்ன வயசுல தூக்கிக் கொஞ்சன அப்பாவா இவருன்னு தோணுச்சு

என் 14 வயதில் நான் எனக்கு சைக்கிள் வாங்கித்தாங்கன்னு கேட்டப்ப உன்னால டிராபிக்ல ஓட்ட முடியுமான்னு வியாக்யானம் பேசினாரு. என் 16 வயதில் நான் +2 சேரும்போது அவர் ஐ.டி.ஐ.பாலிடெக்னிக்னு சேரு. அப்பதான் ஏதாவது கவர்மெண்ட் வேலையில சேரலாம்னு சொன்னாரு. அப்போ லேட்டஸ்ட் விஷயம் அவருக்கு தெரியலைன்னு தோணுச்சு.

என் 18 வயதில் சாலையில் ஒரு பெண்ணோட பேசிக்கிட்டிருந்ததை பார்த்துட்டு வீட்டுக்கு வந்து அம் மாகிட்ட ஆச்சா போச்சான்று கத்தறாரு... இந்த மனுசனுக்கு பைத்தியம் பிடிச்சுடுச்சுன்னு நினைக்கத் தோணுச்சு. என்னோட 20 வயதில் நான் காலேஜ் போறதுக்கு பைக் வாங்கித்தான்னு கேட்டா, நாங்கெல்லாம் அந்த காலத்தில் நடந்தே போய் படிச்சோம்னு சொல்றாரு. எது கேட்டாலும் அதை வாங்கித் தர்றதுக்கு ஆயிரத்தெட்டு நொட்டை சொல்றாரு. இந்த அப்பாகிட்ட அம்மா எப்படி சமாளிக்கறாங்கன்னு தெரியவில்லையேன்னு நினைச்சேன். என் 25 வயதில் எங்கப்பாவுக்கு என்ன ஆச்சு? நான் எது சொன்னாலும் எதிர்த்தே அதற்கு நேர்மாறா சொல்றாறேன்னு தோணுச்சு

எனது 40 வது வயதில் என் அப்பாவை நினைத்துக் கொண்டபோது அவர்பட்ட கஷ்டங்கள் புரிந்தது. ஏனென்றால் எனக்கு 12 வயதில் பையன் இருக்கிறானே?

எனது 45 வயதில் எனது மகன் என்னை நிக்க வைத்து கேள்வி கேட்டபோது எங்கப்பாவை எதிர்த்து பேசியது நினைவுக்கு வந்தது. இப்ப ஒரு பெண் பிள்ளையை வளர்க்கவே இந்த பாடுபடறோமே அப்பா என்னை, தம்பிய, அக்கா தங்கச்சியின்னு ஆறு பேரை வளர்க்க எப்படி கஷ்டப்பட்டிருப்பாரோன்னு என் 50 வயதில் தோணுச்சு. இப்ப எனக்கு வயது 60ஐ தொடப்போகுது. போகிற வருகிறவர்கள் எல்லாம் என் அப்பவைப் பற்றி பெருமையாக சொல்லும்போது அவருக்கு மகனாக பிறந்ததை எண்ணி சந்தோஷப்படுறேன்.

என்ன உங்க அப்பா நினைப்பு உங்களுக்கும் வந்துடுச்சா?

---

ஒருத்தன், கோல்கேட் பற்பசையில் பல் துலக்கி; கில்லெட் ரேசரில் சவரம் செய்து; ஹெட் அண்ட் ஷோல்டர் ஷாம்பூவும் லக்ஸ் சோப்பும் போட்டு குளித்து ; ஓல்ட் ஸ்பைஸ் வாசனை திரவியத்தை பூசிக்கொண்டு; ஜாக்கி ஜட்டியையும் , க்ரூசோ பனியனையும்; பீட்டர் இங்க்லெண்ட் சட்டையையும், ஆக்சம்பர்க் பேன்ட்டையும் போட்டுக்கொண்டு ; மேகி நூடுல்சை சாப்பிட்டு, நெஸ்கபே காபியை குடித்துவிட்டு ; ரீபோக் ஷூவை மாட்டிக்கொண்டு; சாம்சங் போனை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, ரேபான் கண்ணாடியையை அணிந்து; வெஸ்டார் வாட்சைக் கட்டிக்கொண்டு, சுசுகி பைக்கில் வேலைக்குப் போய்; ஆப்பிள் கம்ப்யூட்டரில் வேலை நடுவிலே, கொக்கோ கோலா அருந்தி; மெக்டோனல்டில் மதிய உணவை முடித்துக் கொண்டு; மாலை வீடு திரும்பும்போது, மனைவிக்கு கே எப் சி பர்கரும், குழந்தைகளுக்கு டோமினோ பீட்சாவும் ஆர்டர் கொடுத்தான். **அப்புறம் எப்படி இந்திய ரூபாய் மதிப்பு உயரும்?**




## நஞ்சற்ற உணவே நோயற்ற வாழ்வு

# இஞ்சி, சுக்கு, கடுக்காய்

*காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு*
*மாலையில் கடுக்காய் மண்டலம் தின்றிட*
*கோலினை ஊன்றிக் குறுகி நடப்பவர்*
*கோலினை வீசி குலவித் திரிவரே*
*என்னே விந்தை!!*

கடும்பகல் சுக்கு என்பது பகல் உணவில் சுக்கு சேர்ப்பது ஆகும். தேர்ந்த ‘மாவு சுக்கு’ என்பது எல்லா ஊர்களிலும் கிடைக்கும். பூச்சி அரிப்பு, சொத்தை இல்லாத சுக்கு அரை கிலோ வாங்கி வெயிலில் உலர்த்தி மேல் தோலை சீவி நன்றாக இடித்துப் பொடி செய்து சலித்து 1 பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். பகலுணவில் 1 பிடி சாதத்துடன், 1 ஸ்பூன் மேற்படி சுக்குப் பொடியைக் கலந்து பிசைந்து சாப்பிடவும். ஆண்டுக்கு 4 முறை இவ்விதம் சாப்பிடுவது தினசரி காயகல்பமாகும். சுக்கு போலவே ‘கடுக்காயும்’ நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும். இதனை 1 கிலோ வாங்கி உள்ளிருக்கும் கொட்டையை நீக்கிப் பின் உலர்த்தி பொடி செய்து கலந்து வைத்துக் கொள்ளவும். முலீலை 6 மணிக்கு அரை ஸ்பூன் அளவு எடுத்து பசும் பாலுடன் அல்லது தேனுடன் கலந்து சாப்பிட, உடல் நோய் அணுகாமல் ‘கல்பம்’ போல் இறுகும்.

நாள் தோறும் சாப்பிட்ட பிறகு இரண்டொரு நெல்லிக் காய்களை மென்று தின்று வாருங்கள். அத்துடன் தினம் ஒரு முறை ஒரு சிட்டிகை கடுக்காய்ப் பொடியையும் சாப்பிட்டு வரவும். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இளமையாக இருக்கலாம். கேழ்வரகு மாவுடன் எள்ளும் சிறிது வெல்லமும் சேர்த்து இடித்து அடை செய்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியம் ஆக இருக்கும்.

## பிரண்டையும் அகத்திக்கீரையும்



வெகு நேரம் உட்கார்ந்து, வேலை செய்பவர்களுக்கும் வியாபாரம் செய்பவர்களுக்கும் கம்ப்யூட்டர் முன்பு உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும் மூலம் என்னும் கொடிய நோய் அணுகாமலிருக்க; வாரம் 2 முறை பிரண்டைத் துவையலும், 15 நாளைக்கு ஒரு தரம் அகத்திக் கீரையும் உணவில் சேர்ப்பதுடன், விடியற்காலை 1 மைல் குறு நடையில் பயிற்சி செய்தல் வேண்டும்.

## களைப்பும் இளைப்பும்

**சிலர்** சிறிது தூரம் நடந்தால் போதும், களைத்து விடுவார்கள். சிலர் கொஞ்ச தூரம் வேகமாக நடந்தால் போதும், களைத்துப் போவார்கள். அது மட்டுமல்ல, மூச்சுத் தடுமாற்றமும் ஏற்படும் ஒரு சிலருக்கு உட்கார்ந்து எழுவதில் கை, கால்களை மடக்கி நீட்டுவதில் சிறிது சிரமம் ஏற்படும். ஒரு சிலருக்கு உடல் கனமாக இருப்பது போன்ற மன உணர்வும் தளர்வும் இருக்கும். இவர்களுக்கு இப்படிப்பட்ட நோய் ஏற்பட முக்கியக் காரணம் விட்டமின் ‘பி’ காம்ப்ளக்ஸ் குறைவே ஆகும்.

முளைக்கீரை, அகத்திக் கீரை, சிறுகீரை, முள்ளங்கிக் கீரை, தூதுவளை, மணத்தக்காளி, பச்சைக் கொத்துமல்லிக் கீரை, தண்டுக் கீரை, பெரிய வெங்காயம், வேர்க்கடலை, பச்சைப் பட்டாணிக் கடலை, பச்சைப் பயறு, கைக் குத்தல் அரிசி, ஆகியவற்றில் விட்டமின் ‘பி’ காம்ப்ளாக்ஸ் நிறைந்து இருக்கிறது.



பேரீச்சம்பழத்தில் இரும்புச்சத்து அதிகமாகவுள்ளது. எக்காரணத்தைக் கொண்டு உடல் இளைத்திருந்தாலும், அவர்கள் பேரீச்சம்பழத்தைத் தாராளமாகச் சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தை முறையாக உணவோடு சேர்த்துக் கொள்வதால், மெலிந்த உடல் தேறும். போகக் களைப்பு நீங்கும். தாது விருத்தியும் பலமும் உண்டாகும்.

# இயற்கை வழியில் அழகு

## கூந்தலுக்கு செம்பருத்தி



7 அல்லது 8 செம்பருத்தி இலைகளைப் பறித்து சிறிது தண்ணீர் தெளித்து அரைத்தால் விழுதாக நுரைத்து வரும். இதை தலையில் தேய்த்து அலசிக் கொண்டால் ஷாம்பு போட்டுக் குளித்தது போல் இருக்கும். தலைமுடியும் கருப்பாக மாறும். உடலுக்குக் குளிர்ச்சியும் கூட.

செம்பருத்திப் பூவை நல்ல வெயிலில் உலர்த்துங்கள். எண்ணெய் குளியலுக்கு மறுநாள் அல்லது தேவையான போது கொஞ்சம் வெந்தயத்தை அரைத்து (ஊறவைத்தோ அல்லது மிக்சியில் பொடியாகவோ) கொஞ்சம் நீரில் 5 நிமிடங்கள் போடுங்கள். அதில் உலர்ந்த செம்பருத்திப்பூவை கொஞ்சம் ஊறவைத்துக் கசக்குங்கள். சோப்பு மாதிரி வரும் நுரையைத் தலையில் தேய்த்து அலசுங்கள். பிசுபிசுக்கு விட்டுவிடும். தலைமுடிக்கும் கேடு இல்லை.



தேங்காயெண்ணையுடன் எலுமிச்சைச் சாறு சேர்த்து நன்றாகத் தலையில் மயிர்க்கால்களில் தடவிய பின், சீயக்காய்ப் பொடி தேய்த்துக் குளிக்கவும். தலை, சருமம் உலர்வதால் தான், பொடுகு ஏற்படுகிறது. தனி சீப்பைப் பயன்படுத்தவும். மரச்சீப்பு, கொம்பு சீப்பினால் வாரிப் பின்னிய காலத்தில் பொடுகு இருந்ததில்லை.

துளசிச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, வேப்ப இலைச் சாறு மூன்றையும் சம அளவில் கலந்து தலையில் நன்றாக வேர்க்கால்களில் படும்படித் தடவி விடவும். 20 நிமிடங்கள் ஊறிய பிறகு தலையை வெதுவெதுப்பான நீரில் அலசி வரவும். வாரம் ஒரு முறை செய்து வர பேன் தொல்லை நீங்கும். எண்ணெய் தடவிய தலையில் பேன் சீப்பால் வாரிப் பெரிய பேன்களை நீக்கினால், மேற்கூறிய வகையில் ஈறுகளும் ஒழிந்து விடும்.

20 கிராம் புகையிலையை ஒரு லிட்டர் நீரில் போட்டு நன்றாகக் கொதிக்க வைத்து தலை முடியை அலசினால், பேன்கள் செத்துப் போகும். தலை முடியும் பட்டுபோல் மின்னும்.

# பாதங்கள் பொலிவு பெற...



பெரும்பாலானோர், மிக அழகாக உடையணிந்து, நகை அலங்காரம் செய்து, முக ஒப்பனை செய்து, பார்க்க லட்சணமாக இருப்பர். ஆனால், கால் பாதங்கள் சோர்ந்து, களையிழந்து, வெடிப்புகளுடன் வெளியில் கால் காட்டவே முடியாதபடி சங்கடப்படுவர். இதற்காக பெடிகியூர் என பியூட்டி பார்லர் போக வேண்டாம்..

எப்படியும், தினமும் ஒரு மணி நேரமாவது, 'டிவி'யின் முன் உட்காருவோம்... இல்லையா? அந்த நேரத்தில், ஒரு அகலமான பாத்திரத்தில், 'வெதுவெதுப்'பான நீர் ஊற்றி, ஒரு கைப்பிடி உப்பு, இரண்டு சொட்டு ஷாம்பு, சில சொட்டுகள் எலுமிச்சை சாறுவிட்டு கலக்கி, இரு கால்களையும் ஊற வைத்து விடுங்கள். நன்றாக ஊறிய பின், இறந்த செல்கள் எல்லாவற்றையும், 'பிரஷ்' மூலம் தேய்த்து, அகற்றி, நகங்களை வெட்டி, நக இடுக்கில் இருந்த அழுக்குகளை நீக்கியவுடன்... கால் பாதங்களின் வலி, அந்த நீரில் கரைந்து போவதை நாம் உணர முடியும். பார்க்கவே புத்துணர்வுடன் இருக்கும், உங்கள் பாதங்கள். நல்ல தூக்கமும், உங்கள் கண்களை தழுவும்!

திருமதி. சுஜாதா மூர்த்தி

# நவம்பர் மாத இராசி பலன்கள்

கணித்தவர்: சிவமனோகரன் தொடர்புக்கு : 7200097256

**மேஷம்:** நல்ல தேக அமைப்பையும், மன உறுதியும் கொண்ட மேஷ ராசி அன்பர்களே!

இம்மாதம் மதிப்பு மரியாதைக்கு குறைவிருக்காது. உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனதில் அவ்வப்போது சஞ்சலம் தோன்றும். சுக்கிரன் 8ல் மறைந்து காணப்படுவதால், தொழில் ரீதியாக கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகலாம். தொழிலில் சில சமயம் தப்பு கணக்கு போட்டு மாட்டிக் கொள்ளும் சூழல் உருவாகலாம். பண வருமானம் தட்டுப்பாட்டில்தான் இருக்கும். இருந்தாலும் 3-க்குடைய புதன் அதை சமாளிக்கும் ஆற்றலைக் கொடுப்பான்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை மயிலாப்பூரில் உள்ள வெள்ளீசரம் கோவிலுக்கு சென்று நெய்தீபம் ஏற்றி சுக்கிரனை வழிபடவும்.

**ரிஷபம்:** இனிமையான எண்ணமும், இனிப்பு பண்டங்களில் நினைவும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

ராசியாதிபதி சுக்கிரன் கேந்திரத்தில் இருப்பதால் நன்மையை செய்வார். புதன் 6ல் மறைவதால் பேச்சில் நிதானம் தேவை. நமக்கு வரக்கூடிய, பணம், வாய்ப்பு தடைபட்டு பின் வரும். அரசுவழி ஆதரவு இல்லை. கோர்ட் வழக்கு இழுத்தடிக்கும். மனதில் குழப்பம் குடி கொண்டிருக்கும். 5ல் இருக்கும் குருபகவான் பார்வையால் நிலைமைகள் கட்டுக்குள் இருக்கும். தேக ஆரோக்கியம் சீராக இருக்கும். மருத்துவச் செலவு இருக்காது.

**பரிகாரம்:** புதன் அன்று மீனாட்சி அம்மனை வழிபடுவது சிறப்பு சேர்க்கும்.

**மிதுனம்:** முன் ஜாக்கிரதையாகவும் எப்போதும் மனதில் ஒரு கணக்குப் போட்டுக் கொண்டு வாழும் மிதுன ராசி அன்பர்களே!

இம்மாதம் நன்மை தீமை கலந்தே நடைபெறும். உங்களுக்கு அர்த்தாஸ்டமகுரு பல சோதனைகளை தந்தாலும் ராகுபகவான் அதை எதிர் கொள்ளும் சக்தியை தருவார். இம்மாதம் பண வரவு சுமாராக காணப்படும். தொழில் சீராக இருக்கும். புதிய திட்டங்கள் மனதில் தோன்றினாலும், அதை செயல்படுத்த வேண்டாம் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வழக்குகள் வெற்றி காணும். ரியல் எஸ்டேட் தொழில் விவசாயம் போன்றவை ஏற்றம் தரும். தொழில் சிறப்பாக இருக்கும்.

**பரிகாரம்:** வியாழன் அன்று குருபகவானையும், செவ்வாய் கிழமை அன்று முருகனையும் வழிபட வேண்டும்.

**கடகம் :** புது புது எண்ணங்களை எப்போதும் மனதில் சுமக்கும் கடக ராசி அன்பர்களே!

இம்மாதம் உங்கள் பஞ்சமாபதி செவ்வாய் உச்சம் பெற்று காணப்படவதால், எல்லா நன்மையும் நடக்கும். இருப்பினும் 2க்குடைய சூரியன் நீச்சம் பெற்று இருப்பதால், வருமானம் நிறைவாக வந்தாலும் அது கைக்கு எட்டுவது சிரமமாகத்தான் இருக்கும். கடன் வழக்கு கட்டுப்பாட்டில் இருக்கும். மருத்துவச் செலவு மிக குறைவாக காணப்படும். வாக்கில் கடுமை இருக்கும். அதை தவிர்க்கவும்.

**பரிகாரம்:** தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்து சூரிய பகவானை துதிக்கவும்.

**சிம்மம் :** எதிலும் தன்னை முன்னிருத்திக் கொள்ள விரும்பும் சிம்ம ராசி அன்பர்களே!

இம்மாதம் பாதி நன்மையும் பாதி தீமையுமாக நடைபெறும். சுக்கிரன் 4ல் இருப்பதால் பண வரவு நன்றாக இருக்கும். உங்கள் திறமை பளிச்சிடும். இருப்பினும் சனிப் பெயர்ச்சி வரும் வரையில் உங்களை மற்றவர் குறை கூறும்படியான சூழல் அமையும். குருபகவான் வாக்கில் இருந்து இனிமை கூட்டுவார். தொழில் சிறப்பாக இருக்கும். மருத்துவச் செலவு உண்டு. பணம் எவ்வளவு வந்தாலும் செலவுக்கு வழி காத்திருக்கும். உங்கள் திறமைகளை அங்கீகரிக்க கிரக சூழல் அவ்வளவாக சரியில்லை. புது திட்டத்தை ஒத்தி போடவும். பொறுமை மிக மிக அவசியம்.

**பரிகாரம்:** செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் அம்மன் கோவிலுக்கு சென்று விளக்கெண்ணையில் தீபம் ஏற்றி வழிபடவும்.

**கன்னி :** புதுப்புது திட்டம் தீட்டுவதில் திறமைசாலியான கன்னி ராசி அன்பர்களே!

இம்மாதம் உங்கள் ராசியாதிபதி 3ல் மறைந்து இருப்பதாலும், ஜென்ம குரு இருப்பதாலும் அலைச்சல், மனசஞ்சலம், குழப்பம் இவையெல்லாம் இருக்கத்தான் செய்யும். சுக்கிரன் 4ல் காணப்படுவதால் வருமானம் தேவைக்கேற்ப இருக்கும். தொழில் சுமாராக நடக்கும். குடும்பத்தில் குழப்பம் தோன்றி மறையும். பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் தைரியமாக எதிர் கொள்வீர்கள். மனதில் பக்தி பிரகாசிக்கும். தேவையில்லாத பிரச்சனைகளை தலையில் ஏற்றி வைத்துக் கொண்டு வருத்தப்படுவீர்கள். கவனம் தேவை

**பரிகாரம்:** திருவல்லிக்கேனி பார்த்தசாரதி கோவிலுக்கு சென்று வந்தால் மன அமைதி கிடைக்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையும், கலையுள்ளமும் கொண்ட துலாம் ராசி அன்பர்களே!

எதிர்கால சிந்தனைகள் மேலோங்கும். குடும்பம் அமைதியாக இருக்கும். வருமானம் போதுமானதாக அமையும். மருத்துவ செலவு குறையும். வழக்குகள் தள்ளிப் போகும். 4-ம் தேதிக்கு பின் நல்ல சேதி வரும். கலைத்துறையில் எதிர்பார்ப்பு பலமாக இருந்தாலும், ஓரளவு தான் நடைபெறும். இறை நம்பிக்கை கூடும். ஆன்மிக சுற்றுலாவுக்கு திட்டம் தீட்டுவீர்கள். இம்மாதத்தில் கடுமையான உழைப்பும், அதற்கு தகுந்தாற்போல் ஊதியமும் இருக்காது. நட்பு வட்டாரம் வளரும். தொழில் மேம்பாடு குறித்து ஆலோசனை செய்வீர்கள்.

**பரிகாரம்:** திருச்சி ஸ்ரீரங்கப் பெருமானை வணங்க நன்மை நடக்கும். பஞ்சபூத ஸ்தலங்களுக்கு சென்று வாருங்கள்.

**விருச்சகம்:** எந்த ஒரு காரியத்தையும் முன்நின்று துணிச்சலோடு எதிர்கொள்ளும் விருச்சக ராசி அன்பர்களே!

ஜென்ம சனி மாறும் வரை குடும்பத்தில் குழப்பம் நிகழும். வீன் விரையங்களை தவிர்க்க முடியாது. வாக்குறுதியை காப்பாற்ற முடியாது. வருமானம் தேவைக்கேற்ப வரும். உடல் நலத்தில் அக்கறை வேண்டும். மருத்துவ செலவு கூடும். இம்மாதம் எதிரிகளின் கை ஓங்கும். கூடிய வரையில் மௌனமாக இருப்பது உத்தமம். மனதில் வெறுமை காணப்படும். இப்படி பல கிரகங்கள் நமக்கு சப்போர்ட் இல்லாமல் போனாலும் குரு நம்மை காப்பாற்றுவார்.

**பரிகாரம்:** சிவன் கோவிலுக்கு செல்வது மனதுக்கு அமைதி தரும்.

புலால் மறுத்தல்-குறள் எண் : 255

**உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண**
**அண்ணாத்தல் செய்யா தளறு.**

புலால் உண்ணும் பழக்கம் பெருகிக் கொண்டே போனால் பிராணிகள் உயிரோடு வாழும நிலையே அரிதாகி விடும். ஊன் உண்டால் நரகம் அவனை வெளியே விடாது.

**தனுசு:** நேர்மையும் நெஞ்சுரமும் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!

குடும்பத்தில் அதிக மகிழ்ச்சி காணப்படும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். வரவு நன்றாக இருக்கும். நினைத்த பொருளை உடனே வாங்கி மகிழ்வீர்கள். வழக்குகளில் வெற்றி, பகைவர்கள் விலகி செல்வார்கள். வீண் விரயம் வந்தாலும் அதற்கேற்ப பணவரவு உண்டு. மருத்துவ செலவு உண்டு. தகப்பனார் உடல் நிலையில் அக்கறை காட்ட வேண்டும். தொழில் மாற்றம் கொண்டு வர திட்டம் தீட்டுவீர்கள். நண்பர்கள் மிகவும் உதவியாக இருப்பார்கள். அரசு வழியில் ஆதரவு இருக்காது. பதவி உயர்வு தள்ளிப் போகும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைவர்.

**பரிகாரம்:** மயிலை கபாலீஸ்வரர் கோவிலுக்கு சென்று விளக்கு எண்ணையில் தீபம் எற்றி வழிபடுவது நலம்.

**மகரம்:** வெகு ஜனத் தொடர்பும், பாராட்டையும் விரும்பும் மகர ராசி அன்பர்களே!

ராசிநாதன் 11ல் இருப்பதாலும் 11க்குடையவன் உச்சம் பெற்றிருப்பதாலும் எவ்வளவு பெரிய செலவு வந்தாலும், எவ்வளவு பெரிய பிரச்சனை வந்தாலும் அதை சமாளிக்கும் திறன் சிறப்பாக அமையும். கலைஞர்கள் உற்சாகம் அடைவர். தொழில் சிறப்பாக இருக்கும். வாக்கு கொடுத்தால், காப்பாற்ற முடியாமல் போகும். வாக்கில் நிதானம் தேவை. ஆன்மீக சிந்தனை அதிகமாகும். உங்களுக்குள் சுய தேடல் ஆரம்பம் ஆகும் நேரம் இது. இறைநம்பிக்கை பலம் கூட்டும்.

**பரிகாரம்:** சூரிய வழிபாடு, சிவன் வழிபாடு சிறப்பு சேர்க்கும்.

**கும்பம்:** தன்னைப் பற்றி பெருமை கொள்வதிலும், பிறரைப் பற்றி புரிந்து கொண்டு உதவி செய்வதிலும் சிறந்து விளங்கும் கும்ப ராசி அன்பர்களே!

ஜீவனாதிபதி உச்சம் பெறுவதால் தொழில் சிறப்பாக இருக்கும். பண வரவு திருப்தியாக இருக்கும். தெய்வ சிந்தனை சிறந்து காணப்படும். வாழ்க்கை வசதிகளுக்கு எந்தக்குறையும் இருக்காது. நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். மருத்துவ செலவு எப்போதும் போல் இருக்கும். தொழிலை விரிவுபடுத்தும் எந்த முயற்சியும் பலிக்கும். கலைதுறை யினருக்கு இது சிறப்பான நேரம்.

**பரிகாரம்:** முருகன் வழிபாடு, பஞ்ச பூத தலங்கள் வழிபாடு, சூரிய வழிபாடு சிறப்பு தரும்.

**மீனம்:** பார்ப்பதற்கு இனிமையாகவும், பேச்சு கடுமையாகவும் உழைப்பில் விடாமுயற்சியும் கொண்ட மீன ராசி அன்பர்களே!

செவ்வாய் உச்சம் பெற்று இருப்பதால் வரவு அமோகமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். பகைவர்கள் நண்பர்களாக மாறுவர். கலைத்துறையில் உள்ளவர்கள் புதிய வாய்ப்பினை பெறுவர். உடன் பணிபுரிவோர் உதவியாக இருப்பர். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். மைத்துனர் மூலம் உபத்திரம் வரும். பிள்ளைகள் உதவியாக இருப்பார்கள். வாகனங்கள் செலவு வைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**பரிகாரம்:** சிவன் ஆலயத்திற்கு செல்வது சிறப்பு அதிலும் சந்திர மௌலீஸ்வரவரை வணங்குவது மிகச் சிறப்பு.

# மாற்றத்தை ஏற்படுத்தும் சொற்கள்

ஒருவர் வெகுநாட்களாக கொடிய நோயால் பாதிக்கப்பட்டு அவதியுற்று வந்தார். ஒரு நாள் அவரைப் பார்க்க, சமய குரு ஒருவர் அவர் வீட்டிற்கு வந்தார். வாடிய உடலோடு, மனமும் சோர்வுற்ற நிலையில் இருந்தார் அந்த நோயுற்றிருந்த நபர். இதைப் பார்த்த சமய குரு, " நாம் அனைவரும் இவருக்காக இறைவனிடம் வேண்டிக் கொள்வோம்" என கூறி மனமுருகி அவருக்காக வேண்டிக் கொண்டார். அங்கிருந்த அவரது நண்பர்களும், உறவினர்களும் அவரோடு இணைந்து கடவுளை வேண்டத் தொடங்கினார்கள்.

பிறகு அந்த சமய குரு, "இறைவனின் அருளால், நிச்சயம் உங்களுக்கு நோய் குணமாகி விடும். இத்தனை பேரும் உங்கள் நோய் குணமாக வேண்டி இருக்கிறார்கள். உங்களுக்கு உடல் நிலை சரியாகி விடும்" எனக் கூறினார்.

அந்த கூட்டத்தில் நாத்திகன் ஒருவன் இருந்தான். போதகர் சொன்னதைக் கேட்டதும் நக்கலாய் அவன் சிரிக்கத் தொடங்கினான்.

"வெறும் வார்த்தைகள் போய் அவனைக் குணப்படுத்துமா? அல்லது வெறும் சொற்கள் மாற்றத்தை ஏற்படுத்துமா?" என கூறி சிரித்தான்.

அதற்கு அந்த சமய குரு, "இந்தக் கூட்டத்திலேயே மிகப் பெரிய முட்டாள், மூடன், மூர்க்கன் நீங்கள் தான்" என சொன்னார்.

இதைக் கேட்டதும் அவன், "நீங்கள் கூறியதற்கு உடனே மன்னிப்பு கேளுங்கள். இல்லையே உங்களை அடித்து விடுவேன்" என்றபடி அடிக்கப் பாய்ந்தான்.

பதற்றமே இல்லாத அந்த சமய குரு, "முட்டாள், மூடன், மூர்க்கன் என்பது வெறும் சொற்கள் தானே, அவை உங்களை இப்படி மாற்றி விட்டதே, எப்படி? இந்தச் சொற்கள் உங்களை எப்படி தூண்ட முடிகிறதோ, அதே போல தான் நல்ல சொற்களால் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்" என்றார். இதைக் கேட்ட அவன் வெட்கித் தலை குனிந்தான்.




## வேப்பிலை இனிக்கும் ஆலயம்...

# வேண்டும் வரம் தரும் மத்தூர் ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி அம்மன்

உலகங்கள் யாவற்றையும் கடைக்கண் அருட்பார்வையினால் காக்கின்ற தெய்வம் அம்பிகை. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மத்தூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் "மகிஷாசுரமர்த்தினி அம்மன்" பூமியிலிருந்து வெளிப்பட்டு சுமார் 55 ஆண்டுகளாகின்றன. இத்திருத்தலம் 64 சக்தி பீடங்களக்கு இணையாக வைத்துப் போற்றப்படுகிறது.

திருத்தணி ஊருக்குள் செல்லாமல் திருத்தணி திருப்பதி சாலை வழியே சென்றால், பொன்பாடி ரயில்வே கேட் அருகே இடதுபுறம் திரும்ப வேண்டும். அங்கிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் மத்தூர் அமைந்துள்ளது.

மத்தூர் எல்லையில் 1962 ஆம் ஆண்டு அரக்கோணம் ரேணிகுண்டா சக்திமேடு என்ற இடத்தில் கூலியாட்கள் கடப்பாறையால் மண்ணைப் பெயர்த்தார்கள். ஒரு கூலியாள் கடப்பாறையால் மண்ணைத்தோண்டும்போது "டங்" என்ற சப்தத்துடன் தெய்வ அருளால் மயங்கி விழுந்தான். கூட்டம் கூடி அந்த இடத்தில் மண்ணை அகற்றினர். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. ஒரு பிரம்மாண்ட துர்க்கை விக்ரகம் முற்றிலும் வித்தியாசமான தோற்றத்தோடு (மலர்ந்த முகத்தோடு), எட்டுக் கரங்களுடன் கம்பீரமான திருவுருவத்தோடு பூமியில் இருந்து நம்மை காக்க எழுந்தருளினாள். உடனே அக்கிராம மக்கள் ஒரு ஓலைக் குடிசை வேய்ந்து அந்த துர்க்கைக்கு 'காளி அம்மன்' என்று பெயரிட்டு வழிபட்டு வந்தனர். மகிஷாசுரமர்த்தினி பல ஆண்டுகளாக பூமிக்குள் இருந்தபோது அந்த பகுதி 'சக்திமேடு' என்று பெயர் பெற்று விளங்கியது. இங்கு உச்சிப்பொழுதிலோ, இரவு நேரத்திலோ வருபவர்களை அன்னை தனது மகா சக்தியால் மூர்ச்சையுறச் செய்து வந்தாள். அன்னையின் திருவுருவம் புதைந்து கிடக்கும் இரகசியம் தெரியாமல் மக்களிடத்தில் ஒருவித பயம் நிலவி வந்தது. அன்னையின் திருவருவம் வெளிப்பட்டபின் இன்றுவரை இதுபோன்ற நிகழ்ச்சிகள் இங்கு நிகழ்வதில்லை. இக்கோவிலின் வேப்ப மரத்தின் வேப்பிலை கசப்பதில்லை. அன்னை இம்மரத்தின் இலையில் உள்ள கசப்பை தான் ஈர்த்துக் கொண்டாள். ஸ்தல விருச்சமான வேப்பமரத்தின் வேப்பிலை பிரசாதத்தை உண்டு சகல சௌபாக்கியங்களையும் பெருவோமாக...!



எட்டு கரங்களில் சங்கு சக்கரம், வில், மகாலை ஆகியவறை தரித்து மகிடாசுரனை தனது திருசூலத்தால் குத்தி வென்ற அருட்பார்வையால் உலகினை நோக்கும் சாந்த சொரூபினியாக அன்னை எழுந்தருள்புரிகிறார். ஏழு அடிக்கும் மேல் நெடிதுயர்ந்த மகிடாசுரனின் தலையில் அன்னை நடனம்புரியும் காட்சி காண்பவர்களுக்கு பக்திப் பரவசத்தையும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் பிரமிப்பையும் மெய் சிலிர்ப்பையும் ஏற்படுத்தும்.

-வி. மீனாட்சி

# மாணவர்கள் பக்கம்



S. Surya
STD VII-B,
SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL
CHENNAI

## ஆச்சரியமான அரிய தகவல்கள்

### ஷாக் அடிக்கும் மீன்



மின்சாரத்திருக்கை (ரே) மின் அதிர்ச்சி கொடுத்து தாக்கவும், தனது இரையை கொல்லவும் கூடியது. ஒரு முறையில் இது செலுத்தும் மின்சாரத்தின் அளவு 350 வோல்ட். இது நம் வீட்டு மின் கம்பிகளில் பாய்ந்து கொண்டிருக்கும் 230 வோல்ட் மின்சாரத்தைவிட மிகவும் வலுவானதுதான். ஷாக் அடித்துவிட்டதால் போச்சு, அப்புறம் பிழைக்க முடியாது.

### பாய்ச்சல் பூச்சி



படத்தில் உள்ள தெள்ளுப் பூச்சி, 25 செ.மீ. உயரத்துக்குத் தாவக்கூடியது. இது ஒரு பெரிய விஷயம் என்கிறீர்களா?

இந்த உயரத்துக்குத் தாவுவது வெறும் அரை செ.மீ. அளவே உள்ள சின்னஞ்சிறு பூச்சி. ஒரு மனிதன் இப்பூச்சிக்கு இணையாகத் தாவவேண்டுமென்றால், 100 மீட்டர் உயரத்துக்குத் தாவ வேண்டும். இப்போது புரிகிறதா இந்தப் பூச்சியின் திறமை.

### பறக்கும் மான்

கிளிப் ஸ்பிரிக்கர் என்ற சிறியவகை ஆப்பிரிக்க இரலை மான் 7 அடி உயரத்துக்குத் தாவக்கூடியது. நாம் நிற்கிறோம் என்றால், நம் தலையைத் தாண்டி தாவிவிடும். உயிரினங்களிலேயே அதிக உயரத்துக்குத் தாவக்கூடியது இதுதான். இதன் உயரம் வெறும் 45 செ.மீ. எடை 9 கிலோதான். குதித்த பிறகு நிலத்தில் தரையிறங்க, அது பயன்படுத்திக் கொள்ளும் பகுதி மிகமிகக் குறுகியது. ஒரு பிஸ்கட் அளவுள்ள பரப்பிலேயே அது தரையிறங்கிவிடும்.



S. Surya






S. JANAKI
STD IX-A,
GOOD SHEPHERED M.H.S. SCHOOL
CHENNAI

"உண்ணா விரதம் இருக்கப் போகிறீர்களா? பயம் வேண்டாம். உண்ணாமல் பல வாரங்கள் வரை நாம் உயிர் வாழலாம். சாப்பிடா விட்டாலும் பரவாயில்லை. தூங்காமல் இருக்க வேண்டாம். உறங்காமல் பதினோரு நாட்களுக்கு மேல் ஒருவரால் உயிர் வாழ முடியாது."

# கோபால் நாயக்கரின் "பழனி சதித் திட்டம்"

தமிழ்நாட்டில் பிரிட்டிஷாரை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவன், மருது பாண்டியர்கள் உள்ளிட்ட வீரத் தமிழர்கள் எழுந்தனர்.

அவ்வரிசையில் நாயக்க மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின் மதுரை மற்றும் அதற்குட்பட்ட பாளையப் பகுதிகளில் ஆற்காடு நவாப் தன் சகோதரர் மூலம் வரி வசூல் செய்தார். அதற்கு பிரிட்டிஷாரும் உதவியாக இருந்தனர்.

பூலித்தேவன், மருது சகோதரர்கள் போன்றவர்கள் பிரிட்டிஷாருக்கு வரிகட்ட மறுத்து, கடும் எதிர்ப்பு தெரிவித்துப் போராடியது போலவே திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே விருப்பாச்சி (Viruppachi) என்ற ஊரைச் சேர்ந்த கோபால் நாயக்கர் (Gopal Naicker) என்பவரும் பிரிட்டிஷாரைக் கடுமையாக எதிர்த்தார்.

அந்நாளில் மைசூர் அரசின் கீழ் இருந்த திண்டுக்கல் பகுதியை 1783-ஆம் ஆண்டு பிரிட்டிஷார் கைப்பற்ற முயன்றனர். கோபால் நாயக்கர் அதை முறியடித்தார்.

1792-ஆம் ஆண்டு மூன்றாவது மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் பின் வாங்கினார். பிரிட்டிஷார் கைப்பற்றிய திப்பு சுல்தானின் பகுதிகளில் இந்தக் கோபால் நாயக்கரின் விருப்பாச்சியும் இடம் பெற்றிருந்தது. திப்பு சுல்தானுடன் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்த விருப்பாச்சி பிரிட்டிஷ் அரசின் கீழ் வந்தது. இதைக் கண்டு கடும் கோபமடைந்த கோபால்நாயக்கர், பிரிட்டிஷாரை எதிர்க்க மணப்பாறை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய பகுதிகளில் இருந்த எதிர்ப்பாளர்களை எல்லாம் ஒன்று திரட்டி, 1797-ஆம் ஆண்டு 'திண்டுக்கல் கூட்டு இணைப்பு' என்ற அமைப்பை உருவாக்கினார்.

1799-ஆம் ஆண்டு மீண்டும் திப்பு சுல்தானுக்கு எதிரான போரை மைசூரில் பிரிட்டிஷார் துவக்கியவுடன் விருப்பாச்சியிலிருந்து பிரிட்டிஷாரை திண்டுக்கல் படைகள் தாக்கின. போரில் திப்பு சுல்தான் கொல்லப்பட்ட பின், 'கட்டபொம்மனுக்கும் திப்பு சுல்தானுக்கும் ஏற்பட்ட கதிதான் உனக்கும் ஏற்படும்' என்று பிரிட்டிஷாரால் மிரட்டப்பட்டார் கோபால் நாயக்கர்.

ஆனால் இதற்கெல்லாம் பயப்படாத கோபால் நாயக்கர், 1800-ஆம் ஆண்டு பழனி மலையில் எதிர்ப்பாளர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். மைசூரைச் சேர்ந்த துந்தாஜி என்பவரும் இதற்கு உதவினார். இது 'பழனி சதித் திட்டம்' என்று பிரிட்டிஷாரால் அழைக்கப்பட்டது. இந்தத் திட்டப்படி கோவையில் இருந்த பிரிட்டிஷாரின் கோட்டையைத் தாக்க வேண்டும் என்று கோபால் நாயக்கர் முடிவு செய்தார்.

ஆனால் திட்டமிட்டதற்கு ஒருநாள் முன்பே தாக்குதல் துவங்கியதால் கோபால் நாயக்கரின் முயற்சி தோல்வியில் முடிந்தது. அவரை ஆதரித்த துந்தாஜி உள்ளிட்ட எதிர்ப்பாளர்கள் அனைவரையும்






*பிரிட்டிஷார் கோவையில் தூக்கிலிட்டனர். என்றாலும் இச்சம்பவம் பிரிட்டிஷாரின் கொடூர குணத்தைத் தோலுரித்துக்காட்டி, அன்னியர் எதிர்ப்பு உணர்வுக்கு வித்திட்ட வகையில் வெற்றி பெற்றது.*

*பிரிட்டிஷார் கோபால் நாயக்கரைப் பிடிக்க முயன்றனர். ஆனால் அவருடன் கிராமப் போர் வீரர்கள் பாதுகாப்புக்காக இருந்தனர். கோபால் நாயக்கரைப் பிடித்துக் கொடுத்தால் ரூபாய் 2,000 பரிசு தருவதாக பிரிட்டிஷார் அறிவிப்பு செய்தனர்.*

**கோபால் நாயக்கர்**

*ஒருநாள் பிரிட்டிஷாரின் கண்களில் நீண்டகாலம் மண்ணைத் தூவிய கோபால் நாயக்கரையும் அவரது பாதுகாவலர்களையும் பிரிட்டிஷ் சிப்பாய்கள் வளைத்துப் பிடித்தனர்.*

*அவர்கள் மீது சம்பிரதாயத்துக்கும் கூட விசாரணை நடத்தாத பிரிட்டிஷார் கோபால் நாயக்கர் உள்பட அனைவரையும் தூக்கிலிட்டனர்.*

**ஆர். குணசேகர்**

# பெண்மையைப் போற்றுவோம்!



பெண்களைப் பற்றி ஒரு ஆண் எழுதிய மனதை தொடும் வரிகள்.

நான் பிறந்த போது என்னைத் தூக்கி அரவணைத்தது ஒரு பெண் **என் அம்மா.** என் குழந்தைப் பருவத்தில் எனக்காகப் பரிந்து என்னுடன் விளையாடினாள் ஒரு பெண் **என் சகோதரி**. நான் பள்ளிக்கு சென்ற போது அன்புடன் கல்வி கற்பித்தவள் ஒரு பெண் **என் ஆசிரியை** நான் கவலையுடன் இருந்த போது தோள் கொடுத்து ஆறுதல் சொன்னாள் ஒரு பெண் **என் தோழி** எனக்கு உறவாகவும் உயிராகவும் துணையாகவும் இருந்தாள் ஒரு பெண் **என் மனைவி** நான் கோபமாக இருந்தபோது தனது மழலைச் சொற்களால் என்னை மயங்க வைத்தாள் ஒரு பெண் **என் மகள்.** நான் இறக்கும் போது என்னைத் தன்னுள் உறங்கச் செய்வாள் ஒரு பெண் (என் தாய்நாடு). **நீ ஒரு ஆணாக இருந்தால் ஒவ்வொரு பெண்ணையும் போற்றி வணங்கு...!!!நீ பெண்ணாக இருந்தால் அதற்காகப் பெருமைப்படு...!!!** ஒரு பெண் வாழ்க்கையில் தனக்கு ஏற்படும் கவலைகளையும் துன்பங்களையும் தனது பிரார்த்தனைகளாலும் அசையாத நம்பிக்கையாலும் எதிர்கொள்கிறாள்.

மித்ரா
சினி
ஹோலிவுட்

# இறைவி நாயகிக்கு சர்வதேச விருது!



பூஜா
தேவரியா

'இறைவி'யில் விஜய் சேதுபதியோடு ஸ்லீப்பிங் காட்சிகளில் ஸ்வீப் அடித்து, இளம் நெஞ்சங்களை விரகதாபத்தில் கதறவிட்டவர் பூஜா தேவரியா. அடிப்படையில் தியேட்டர் ஆர்ட்டிஸ்ட்டான பூஜா, செல்வராகவனின் 'மயக்கம் என்ன?' படம் மூலமாகத்தான் சினிமாவில் தன் கணக்கை ஆரம்பித்தார். 'இறைவி' அவரை பிரபலமாக்க அடுத்தடுத்து 'குற்றமே தண்டனை', 'ஆண்டவன் கட்டளை'யென்று அரை டஜன் படங்களுக்கு மேலாக பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. சினிமா நடிகையாக பிரபலமாகியிருக்கும் பூஜா சத்தமேயில்லாமல் சர்வதேச விருது ஒன்றை தன்னுடைய நாடகத் திறமைக்காகப் பெற்றிருக்கிறார். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் நடைபெறும் ஹாலிவுட் நாடகவிழாவான 'ஷார்ட் - ஸ்வீட்' நிகழ்வில் 'வளரும் கலைஞர்' விருதை வென்றிருக்கிறார் பூஜா.

வாழ்த்துக்கள்!

*******************************

அருண்விஜய் நடித்து தயாரிக்கும் படம் 'குற்றம் 23'. அறிவழகன் இயக்குகிறார். வெற்றிமாறன் ஏசிபியாக, உயர் போலீஸ் அதிகாரி வேடம் ஏற்கும் அருணின் இப்பட போஸ்டரை நடிகை திரிஷா தனது இணைய தள பக்கத்தில் வெளியிட்டார். மருத்துவ துறையில் நடக்கும் மோசடியை மையமாக வைத்து இப்படம் உருவாகிறது.

# ஆடியோ ரிலீஸில் அவர் அழுதார்; படம் பார்த்து நாம் அழுதோம்!



**க**மலின் அவ்வை சண்முகி வெளியானபோது அந்தப் படத்தின் கதையையும் கமலின் பெண் வேடத்தையும் ரசித்தனர். காரணம் தன்னுடைய மனைவி தன்னைவிட்டுப் பிரிந்து விவாகரத்து வரை சென்றவளை திருத்தி தன் மீது அன்பு கொள்ள வைத்த படம் அது. ஆனால் சிவகார்த்திகேயன் பெண் வேடத்தில் நடித்த 'ரெமோ' என்ற படத்தை அவ்வளவாக ரசிக்கவில்லை.

அவ்வை சண்முகி படம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் இருந்தன.

ஆனால் ரெமோ படத்தில் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை "பெற்றோர் சொல்பவனை மட்டுமே திருமணம் செய்து கொள்வேன்" என்று குடும்பத்துக்கு அடங்கி நடக்கும் பெண்ணை அடைவதற்காக பெண் வேடம் போட்டு நடித்த சிவகார்த்திகேயனுக்கு சமூகப் பொறுப்பு இல்லை என்ற காரணமே இந்தப் படத்திற்கு பெருந்தோல்வியாக அமைந்துவிட்டது

ஏனெனில் ஒரு பெண் காதலிக்க மறுத்தால் கொலை செய்யும் அளவுக்கு துணிந்து நின்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக நடந்துள்ளன. இந்தப் படத்தின் மூலம் ஏமாற்றினால் ஒரு பெண் தன்னை விரும்பி ஏற்றுக் கொள்வாள் என்ற எண்ணம் பெண்கள் மத்தியில் வந்துவிடாதா?

ஏனெனில் சினிமா பார்த்துதான் பெரும்பாலும் தங்களின் லைஃப் ஸ்டைலை அமைத்துக் கொள்கிறார்கள். அவர்களை வழிநடத்தும் பொறுப்பு சினிமாத்துறையைச் சேர்ந்த அனைவருக்கும் உண்டு. கதாநாயகர்களுக்கும் உண்டு.






பிரம்மா இயக்கத்தில் ஜோதிகா நடிக்கும் புதிய படத்துக்கு 'மகளிர் மட்டும்' என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது. இந்த படத்தை சூர்யா தயாரிக்கிறார்.



அதனால்தான் எம்.ஜி.ஆர். போன்றவர்களால் தமிழகத்தை ஆள முடிந்தது.

வெறும் இரட்டை அர்த்த வசனங்கள் மிமிகிரி, டான்ஸ் மட்டுமே ஒரு கதாநாயகனை நீண்ட நாளைக்கு திரையுலகம் தூக்கிக் கொண்டாடாது.

ஆடியோ ரிலீஸ் விழாவில் சிவகார்த்திகேயன் அழுதார் என்ற செய்தியை படித்தோம். பின்னாளில் அவரின் ரெமோ படத்தைப் பார்த்துவிட்டு நாம் அழுவோம் என்று அப்போது நமக்கு புரியவில்லை.


# சாமிக்கு ஜோடியாகும் ராகுல் பிரீத்தி சிங்

ஹரி இயக்கத்தில் சாமி படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் எடுக்கப்பட உள்ளது. சாமியில் நடித்த விக்ரம், த்ரிஷா இருவரும் சாமி 2 படத்தில் இருக்கிறார்கள்.

விக்ரம், த்ரிஷா ஜோடியுடன் சாமி 2 படத்தில் இன்னொரு நாயகியும் இருக்கிறார். இந்த வேடத்துக்கு ராகுல் ப்ரீத் சிங்கை ஒப்பந்தம் செய்துள்ளனர். விரைவில் படப் பிடிப்பு தேதியை அறிவிக்க உள்ளனர். சாமி ஜோடிடா.....!



## மித்ரா சினி கோஸிப்



# ஓலைச்சுவடியில் தமிழ்

பண்டைய காலத்தில் குறிப்புகளையும், மேலும் செய்திகளையும் நூல்களையும் எழுதுவதற்கு பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி உள்ளனர்.

தாள்களையும் பனை ஏடு அளவில் ஏடுகளாக வெட்டி, எழுதி, நூல் கோத்து கட்டி வைத்து இருப்பதை தஞ்சை சரசுவதி மண்டப நூலகத்தில் இன்றும் காணலாம். அச்சு எழுத்து வந்த பிறகுங்கூட அச்சேறிய நூல்களைக் கூட ஓலையில் எழுதும் வழக்கம் இருந்தது. மை தொட்டும் ஓலையில் எழுதியிருக்கிறார்கள். ஏடுகளை இதழ், மடல் என்று சொல்லுவது போலத்தான் 'ஓலை' என்றும், எழுதுவதை "ஓலைவிடுத்தான்" என்றும் கூறுவார்கள். சீட்டு கவிகளுக்கு (பாடலாக எழுதப்படும் அஞ்சல்) "ஓலைத் தூக்கு" என்று பெயர்.

நாம் எழுதாத தாளை "வெள்ளைத்தாள்", என்பதுபோல எழுதாத ஓலைகளை "வெள்ளோலை கண் பார்க்க கையால் எழுதானை..." என்பது ஒவ்வையார் பாடல்.

தமிழ்நாட்டில் சங்ககாலத்திலேயே தேர்தல்கள் நடந்தன. வாக்குச் சீட்டாக ஓலை பயன்பட்டது. அந்த ஓலைக்கு 'குடவோலை' என்று பெயர். வாக்குப் பெட்டிக்கு பதில் மண்குடம் பயன்படுத்தப்பட்டது. குடத்தில் இடும் ஓலை 'குட ஓலை' என்று அழைக்கப்படடது.

எழுதுவதற்கு ஏடு பெருமளவில் பயன்பட்டாலும் 'எழுதரிது முன்னம் எழுதிய பின் அதைப் பழுதற வாசிப்பது அரிதாம்' என்கிறது ஒரு பழம் பாடல் "எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்! படித்தவன் பாட்டைக் கெடுத்தான்! " என்பது பழமொழி. மெய்களுக்கு ஒற்று இல்லாமலும், குறில், நெடில் இல்லாமலும் ஏடுகளில் எழுதப்பட்டதே இதற்குக் காரணம்.

இப்பொழுது பனை ஓலைகளில் அழைப்பிதழ், அறிமுக அட்டை போன்றவை அச்சிடுவது நாகரீகமாகிவிட்டது.

"சீனாவுக்கு போயாவது கல்வி கற்றுக் கொள்" என்று திருக்குரான் கூறுகிறது. அந்நாளில் சீனா கல்வியில் சிறந்து விளங்கியதே இதற்குக் காரணம். அச்சுக்கலையின் தோற்றம் மர எழுத்துகள்தான். இந்த மர எழுத்துக்கள் முதன் முதலில் சீனாவில்தான் தோன்றியது. அவர்களது எழுத்துக்கள் ஓவிய எழுத்து என்பதால் இந்த மரஎழுத்து முறை தேவைப்பட்டது. பலகையின் ஒருபக்கம் முழுவதும் அச்சிட வேண்டிய எழுத்துக்களை செதுக்குவார்கள். அதன்மேல் மை தடவி, தாள் வைத்து அச்சடித்தார்கள். அழுத்தப்பட்டதால்தான் பிரஸ் என்று பெயர் வந்தது.

மரப்பலகை அச்சு இந்தியாவிலும் இருந்தது. ஆனால் பெரும்பாலும் துணிகளில் பூக்கோலம் அச்சிடப்பட்டது. இப்பொழுதும் இந்த முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் வேலை அதிகம். ஆனால் பயன் குறைவு. சீன மனிதர்கள் தனியாக மரு எழுத்துக்களைச் செதுக்கினார்கள். கனிம அச்சு எழுத்துகள் கண்டு பிடிக்கப்பட்ட பின்பும் நீண்ட காலம் வரை இந்த மர எழுத்துகள் பல நாடுகளில் பயன்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் 1812-ம் ஆண்டில் திருக்குறள் மர எழுத்துக்களால் அச்சிடப்பட்டது.

**கூடன்பர்க் ஒரு பொற்கொல்லர். இவர் 1455-ல் இலத்தீன் மொழியில் கன்றுக்குட்டியின் தோலில் பைபிளை அச்சிட்டார்.**

**தொடரும்...**

**மொழியின் வரலாறு தொடர்-7**

ஏனுங்க.. எங்க மாவட்ட சிறப்பு என்னான்னு தெரியுங்களா?


# கோவையின் சிறப்புகள்





பாசனத்துக்கு அமராவதி
தாகத்துக்கு சிறுவாணி
ஆத்துக்கு அம்பராம்பாளையம்
பாலத்துக்குப் பெரியபட்டி
தேங்காய்க்கு பொள்ளாச்சி
காய்கறிக்கு மேட்டுப்பாளையம்
கரும்பு, வெல்லத்திற்கு
உடுமலைப்பேட்டை மடத்துக்குளம்
வெண்ணெய்க்கு ஊத்துக்குளி
வடக்கே பத்ரகாளி
தெற்கே மாசாணி
மேற்கே மீன்குளத்தி
கிழக்கே செல்லாண்டி
சிற்பங்களுக்கு திருமுருகன்பூண்டி
முருகனுக்கு மருதமலை
சிவனுக்கு திருமூர்த்திமலை
அரங்கனுக்கு காரமடை
பெருமாளுக்கு திருப்பூர்திருப்பதி
சின்னதிருப்பதி விநாயகனுக்கு
ஈச்சனாரி, புலியகுளம்
குளிர்ச்சிக்கு கோவை குற்றாலம்
பொழுது போக்குக்கு பிளாக் தண்டர்
ஆடிப்பாட திருமூர்த்தி அருவி
மலைக்கு ஆனைக்கட்டி
மலைகளின் ராணி ஊட்டி
மலைகளின் இளவரசி வால்பாறை
முதலைக்கு அமராவதி
யானைக்கு சின்னாறு
குரங்கு சேட்டைக்கு குரங்கு அருவி
மஞ்சத்தாலிக்கு உடுமலை முருங்கப்பட்டி
ஆடை ஆபரணம் ஒப்பணக்கார வீதி
தேருக்கு அவிநாசி
கள்ளுக்கு கொழிஞ்சாம்பாறை
காருக்கு மேட்டுபாளையம் சாலை
மனஅமைதி தியானத்திற்கு ஆழியார், ஈஷா

– பொள்ளாச்சி ஹாகுல் ஹமீது





# முதலமைச்சர் உடல்நிலையில் முன்னேற்றம்!

## - ஒரு சிறப்புத் தொகுப்பு

*1984-ம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, கலங்கியது தமிழகம். அவரும் ஜெயலலிதாவும் இணைந்து நடித்த ஒளிவிலக்கு திரைப்படத்தில் இடம்பெற்ற "இறைவா உன் மாளிகையில் எத்தனையோ மணிவிளக்கு. தலைவா உன் காலடியில் என் நம்பிக்கையின் ஒளிவிளக்கு. ஆண்டவனே உன் பாதங்களை நான் கண்ணீரில் நீராற்றினேன். இன்று ஓர் உயிரைக் காக்க உன்னிடம் கையேந்தினேன்." என்று சவுகார் ஜனகி பாடிய பாடல் தமிழகம் முழுவதும் ஒலிபரப்பப்பட்டது. இன்றைக்கு அதே மனநிலையில் உள்ளது தமிழகம்.*

கடந்த மாதம் 22ந் தேதி முதலமைச்சர் ஜெயலலிதா மெட்ரோ ரயிலைத் துவக்கும் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு "அடுத்த ஆண்டுக்குள் மெட்ரோ ரயில் பணி முழுமையடையும்." என்று பேசினார். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாக அவர் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சிக்குப் பிறகு யாரும் அவரை பார்த்ததாக எந்தப் புகைப்படமும் வெளியிடவில்லை.

செப்.23ந் தேதி பத்திரிக்கைகளில் அவர் அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வெளியானது அனைவருக்கும் அதிர்ச்சி. அதுவும் எம்.ஜி.ஆர் சிகிச்சை










பெற்ற அதே அறையில் ஜெயலலிதா சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற தகவலும் மக்களை கவலைக்குள்ளாக்கியது. அப்போலோ மருத்துவமனையின் தலைமை அதிகாரி சுப்பையா விஸ்வநாதன் தமது குழுவினருடன் “நேற்று இரவு முதலமைச்சர் ஜெயலலிதா நீர்ச்சத்துக் குறைவாக இருந்ததாலும், காய்ச்சல் காரணமாகவும் எங்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் தற்போது நன்றாக உள்ளார். வழக்கமான உணவை உட்கொள்கிறார். சில தினங்களில் அவர் வீடு திரும்புவார்” என்று தெரிவித்தார்.

செப். 27-ந் தேதி அப்போலோ வந்து சென்ற முன்னாள் அமைச்சரும், அ.தி.மு.க.செய்தித் தொடர்பாளருமான பண்ருட்டி ராமச்சந்திரன் “முதலமைச்சர் ஜெயலலிதா நலமாக உள்ளார். விரைவில் வீடு திரும்புவார்” என்றார். அன்றே உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியலை ஜெயலலிதா வெளியிட்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியானது.

செப்.30-ந் தி.மு.க. தலைவர் கருணாநிதி “முதலமைச்சருக்கு என்னானது என்று அவரது கட்சியினரும் பொதுமக்களும் கலங்கிப் போய் உள்ளனர். அவர்களின் குழப்பத்தைப் போக்க முதலமைச்சரின் புகைப்படத்தை வெளியிட வேண்டும்” என்று அறிக்கை வெளியிட்டார். இதற்காக அவர் மீது எதிர்ப்பு கணைகள் வீசப்பட்டன.

அக். 3-ந் தேதி மருத்துவமனைக்கு நேரில் சென்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் “முதல்வர்





நலமுடன் இருக்கிறார். இரண்டொரு நாளில் அவர் வீடு திரும்புவார் என்று அங்கிருக்கும் மூத்தத் தலைவர்கள் என்னிடத்தில் தெரிவித்தார்கள்" என்றார்.




அன்றைய தினம் லண்டனிலிருந்து டாக்டர். ரிச்சர்ட் ஜான் பீலே முதலமைச்சரின் உடல்நிலையை பரிசோதித்துவிட்டு உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார். அப்போலோ நிர்வாகத்தின் சார்பாக "தற்போது அவருக்கு உடலில் ஏற்பட்டுள்ள தொற்றுநோய்க்கு தொடர் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவர்கள் இன்னும் சில நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டும்" என்று தெரிவித்தார்கள்.



டிராஃபிக் ராமசாமி உயர் நீதிமன்றத்தில் , "முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல்நிலை பற்றி தெரிவிக்க வேண்டும்" என்று வழக்கு போட்டார். நீதிபதி, "அது சட்டத்துக்கு மட்டுமே தெரியும்" என்றார்.



அக். 1-ந் தேதி தமிழக கவர்னர் (பொறுப்பு) மாண்புமிகு வித்யாசாகர்ராவ் அப்போலோ வந்தார். அங்கிருந்த மக்களவை துணை சபாநாயகர் சம்பத், ஓபிஎஸ். ஆகியோர் வரவேற்றனர். அவர்கள் மருத்துவமனைக்குள் ஜெயலலிதா மீது அளிக்கப்படும் சிகிச்சைப் பற்றி விசாரித்துவிட்டு "பூரண நலமுடன் இருக்கிறார்" என்று கவர்னர் மாளிகை செய்திக்குறிப்பில் குறிப்பிட்டார்.

அக். 5-ந் தேதி மருத்துவமனை நிர்வாகத்தின் சார்பில் மேலும் சில நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற மருத்துவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டது.

அக்.7-ந் தேதி அப்போலா மருத்துவமனை அறிக்கையில் "முதலமைச்சர் நீரிழிவு நோய் தொற்றுக்கான எதிர்ப்பு மருத்துவமும், சுவாசத் தொற்றுக்கான மருத்துவமும், இருதய நோய்க்கான சிறப்பு மருத்துவமும் உள்ளடங்கிய மருத்துவ குழுவின் கண்காணிப்பில் இருந்து வருகிறார்" என்று தெரிவிக்கப்பட்டது.

அக்.11-ந் முதல்வரின் பொறுப்புகள் ஓ.பன்னீர்செல்வத்துக்கு வழங்கப்பட்டதாக கவர்னர் அறிவித்தார். அதில் இடம் பெற்ற "முதல்வரின் ஆலோசனைப்படி, நியமிக்கப்படுவதாக" என்ற வரிகளின் மீது தி.மு.க. தலைவர் கருணாநிதி, பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சந்தேகங்களை எழுப்பினர்.

"ஆலோசனை சொல்லக்கூடிய அளவுக்கு உடல்நிலை இருக்குமேயானால் அவரை மக்களிடத்தில் பேச வைக்கலாமே என்று கேட்டனர். "தன்னை முதலமைச்சராக்கினால் மட்டுமே கருணாநிதி எந்த சந்தேகத்தையும் எழுப்ப மாட்டார்" என்று பண்ருட்டி ராமச்சந்திரன், கடும் கண்டனம் தெரிவித்தார். "

அக்.12-ந் தேதி முதல் முதல்வரின்








உடல்நிலைக் குறித்து வதந்தி பரப்பியதாக தொடர்ந்து தூத்துக்குடி, சென்னை, நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர்.



தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அப்போலோ வந்து முதலமைச்சர் நலமுடன் இருப்பதாக மூத்த அமைச்சர்கள் தன்னிடம் தெரிவித்தாக தெரிவித்தார்.



அக். 20-ந் தேதி எம்.ஜி.ஆர். காலத்து சுகாதாரத்துறை அமைச்சரும், மருத்துவருமான டாக்டர்.எச்.வி.ஹண்டே அப்போலோ வந்து மூத்த அமைச்சர்களையும், மருத்துவர்களையும் விசாரித்துவிட்டு, "முதலமைச்சர் இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் வீடு திரும்புவார்" என்று தெரிவித்தார்.

**ஆனால் முதலமைச்சரின் உடல்நிலைக் குறித்து அரசின் சார்பில் தலைமைச் செயலாளரோ அப்போலோ மருத்துவமனையின் தலைவரோ எந்த அறிக்கையும் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

கடந்த ஒருமாதமாக மருத்துவமனையில் முதலமைச்சர் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டதிலிருந்து நடந்த சம்பவங்களை இதுவரை தொகுத்துப் பார்த்தோம். எது எப்படியாயினும் முதலமைச்சரின் மலர்ந்த முகத்துடன் இரண்டு விரல்களை காட்டியபடி தொலைக்காட்சியில் தோன்றினால் மட்டுமே மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். ஏனெனில், அ.தி.மு.க. தொண்டர்களின் பால்குடம் ஏந்துதல், அலகு குத்துதல், தீச்சட்டி மிதித்தல், மண்சோறு சாப்பிடுதல் என ஒருமாத கால பிரார்த்தனைகள் நிறைவேற வேண்டும். தங்களுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா தேர்தலின்போது அறிவித்த பல திட்டங்களை அவரால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்றும் நம்புகிறார்கள். மக்களின் நம்பிக்கையும் தொண்டர்களின் பிரார்த்தனைகளையும், சர்வ கட்சித் தலைவர்களின் வாழ்த்துரையும் மீண்டும் அவரை "நம் அம்மா"வாக பார்க்க வைக்கும்.

**முதலமைச்சரின் மலர்ந்த முகத்துடன் இரண்டு விரல்களை காட்டியபடி தொலைக்காட்சியில் தோன்றினால் மட்டுமே மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும்**





# தோல்வி தந்த வெற்றி!

முன்னொரு காலத்தில் “பிழைக்கத் தெரியாத முட்டாள்” என்று 18 வயது இளைஞனை அவனது அப்பா திட்டினார். தோல்விக்கென்றே பிறப்பெடுத்த துரதிர்ஷ்டக்காரன் என்று கேலி பேசினார்கள் அவனது நண்பர்கள்.

அந்த இளைஞன் அடைந்த தொடர் தோல்விகளை உலகத்தில் வேறு யாராவது அனுபவித்திருந்தால், எப்போதோ தற்கொலை செய்துக் கொண்டிருப்பார்கள்.

அத்தனை தோல்விகளையும் உள்வாங்கி, கடைசியில் பிரமாண்டமான வெற்றியை தனதாக்கிய அந்த மாமனிதன் தான் “சாய்க்கிரோ ஹோண்டா”. தனது வாழ்க்கை அனுபவத்தை சாறு பிழிந்து எடுப்பது போன்று “வெற்றி என்பது 99 சதவீத தோல்வியே” என்று அந்த இளைஞன் சொன்னான். Toyoto நிறுவனத்திற்கு piston(உந்துருளி) தயாரிக்கும் தொழிற்கூடம் உருவாக்க வேண்டும் என்பது மாணவர் சாய்க்கிரோ ஹோண்டாவின் கனவு.

யாருக்காகவும் அவன் காத்திருக்கவில்லை. அப்பாவின் திட்டு , சக மாணவர்களின் கேலிகளுக்கு இடையே, மாதிரி உலோகம் உருக்கும் கூடம் ஒன்றை 1928ஆம் ஆண்டு உருவாக்கினார்.

இதற்காக இரவு பகலாக உழைத்தார். ஓராண்டு காலமாக கஷ்டப்பட்டு உழைத்து உருவாக்கிய, மாதிரி piston-ஐ பெரும் எதிர்பார்ப்புடன் Toyoto நிறுவனத்திற்கு எடுத்துச் சென்றார். எங்கள் எதிர்பார்ப்புக்குரிய தரத்தில் உனது piston இல்லை என்று நிராகரித்து விட்டார்கள் பொறியியலாளர்கள். முதலாவது கனவுத் திட்டம் படுதோல்விஅடைந்தது. மனம் பாரமாக இருந்தது. திரட்டி வைத்த முதலீடு மொத்தமும் வீணாகியது. எல்லோரும் தங்களது கேலிகளை பொழிந்தார்கள். புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும் என்ற மனப்பக்குவத்தோடு, ஹோண்டா மீண்டும் முயற்சித்தார். மேலும் பல மாதங்கள் விடாப்பிடியாக உழைத்து அவர் உருவாக்கிய புதிய piston மாதிரியை Toyoto நிறுவனத்திற்கு எடுத்துச் சென்றார்.

அருமை என்று பாராட்டிToyoto நிறுவனம் ஏற்றுக்கொண்டது. தயாரிப்புக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. மனதுக்குள் சிறிய வெற்றிக் களிப்பு கொண்ட சாய்க்கிரோ ஹோண்டா பெரிய தொழிற்கூடம் கட்டினால் தான் அவர்கள் கேட்கும் எண்ணிக்கையிலான piston தயாரிக்க முடியும்.

எனவே, கட்டடம் கட்டத் திட்டமிட்டார் ஹோண்டா. அப்போது ஜப்பான் நாடு உலகப் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்ததால், அங்கே வரலாறு காணாத சீமெந்து தட்டுப்பாடு.

எவ்வளவோ முயற்சி செய்தபோதும் 10 மூட்டை சீமெந்துக் கூட கிடைக்கவில்லை. ஒழுங்காக ஏதாவது வேலையில் போய்ச் சேர்ந்துவிடு என அவரது அப்பா கூறினார். வாழ்க்கை முழுவதும் ரிஸ்க் எடுத்துக்கொண்டே இருப்பாயா என்பார் உயிர்நண்பன்.

இவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காது சீமெந்து கலவைக்கு இணையான மாற்றுக்கலவையை உருவாக்கும் முறையை கண்டுபிடித்தார் ஹோண்டா.

ஆங்காங்கு கடன் வாங்கி சில மாதங்களிலேயே பெரிய தொழிற்சாலையை கட்டி முடித்தார்.

தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி piston தயாரிக்கும் தொழிலை அமர்க்களமாகத் தொடங்கினார். கூடவே இரண்டாம் உலகப்போரும் தொடங்கியது. அமெரிக்கா போட்ட குண்டு,

ஹோண்டாவின் தொழிற்சாலையில் பெரும் பகுதியை உடைத்து நாசமாக்கியது.

ஹோண்டாவின் வாழ்க்கை முடிந்தது என்று பேசிக் கொண்டார்கள் நண்பர்கள். ஆனால்,தனது மொத்தத் தொழிலாளர்களையும் திரட்டிக்கொண்டு, தானே களமிறங்கி சேதங்களை சீர்செய்து, தொழிற்சாலையை மீண்டும் இயக்கிக் காட்டினார் ஹோண்டா.

ஜப்பான் நாட்டில் நிலநடுக்கங்கள் அதிகம். ஒரு நாள் திடீரெனத் தாக்கிய நிலநடுக்கம் ஹோண்டாவின் தொழிற்சாலையைத் தரைமட்டமாக்கி விட்டது.

மொத்தத்தொழிற்சாலையையும் திருப்பிக்கட்ட முடியாத நிலை. வேறு வழியின்றி உடைந்த கருவிகள், மற்றும் மூலப்பொருட்களைக் கிடைத்த விலைக்கு Toyoto நிறுவனத்திற்கு விற்பனை செய்தார் ஹோண்டா. இப்படிப்பட்ட நிலைமையில் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? எண்ணிப்பாருங்கள்.........

ஆனால் அப்போதைய நிலையில் ஹோண்டா கூறிய கருத்து.......

"நான் ஆசைப்பட்ட ஒரு திட்டம் தோல்வி அடைந்தால், துளிகூட கவலைப்பட மாட்டேன்... இருக்கிற நிலைமையை எப்படி மாற்றலாம் என்று தீவிரமாக சிந்திக்கத் தொடங்கிவிடுவேன்."

இரண்டாம் உலகப் போர் முடிந்திருந்த நேரம் ஜப்பானின் பொருளாதாரம் சாம்பலாக்கப்பட்ட காலக்கட்டம். ஜப்பான் முழுதும் பெட்ரோல் தட்டுப்பாடு. கார்கள் எல்லாம் முடங்கிவிட்டன.

எல்லோரும் நடக்கிறார்கள் அல்லது சைக்கிளில் செல்கின்றார்கள். சாய்க்கிரோ ஹோண்டா, வீட்டில் அமர்ந்திருந்தார். அருகில் சைக்கிள் நின்றது. சற்றுத் தொலைவில் புல்வெட்டும் இயந்திரம் இருந்தது.


அந்தப் புல்வெட்டும் இயந்திரத்தில் உள்ள மோட்டாரைக் கழற்றி, இந்த சைக்கிளில் இணைத்தால் என்ன என்று ஹோண்டாவுக்கு ஒரு புத்தம் புது ஐடியா தோன்றியது.

அடுத்த நொடியில் காரியத்தில் இறங்கினார் ஹோண்டா. புல்வெட்டும் இயந்திர மோட்டாரைக் கழற்றி எடுத்து, தனது சைக்கிளில் அவர் பொருத்திய போது உலகின் முதல் மோட்டார் சைக்கிள் பிறந்துவிட்டது.

அதை எடுத்துக்கொண்டு ஆனந்தமாக சுற்றி வந்தார் ஹோண்டா. அதேபோன்று எங்களுக்கும் செய்துகொடு என்று மொய்க்கத் தொடங்கினர் மக்கள். அவரும் சளைக்காமல் செய்து கொடுத்தார். அதன் விளைவு என்ன ஆயிற்று??

அந்த ஊரில் மோட்டார் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இதையே பெரிய தொழிலாக மாற்றினால் என்ன என்று சிந்தித்தார் ஹோண்டா.

கையில் பணமில்லை, வங்கிகள் கடன்தரத் தயாராகவில்லை. ஹோண்டா துரதிர்ஷ்டக்காரன் என்று எல்லோரும் கூறினார்கள்.



அப்போதும் கலங்கவில்லை ஹோண்டா. தனது தொழில் திட்டத்துக்கு பண உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்து, ஜப்பானில் உள்ள 18 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்களுக்கு கடிதம் எழுதினார்.

முதலீடு செய்யும் சைக்கிள் கடைக்காரர்கள், மோட்டார் சைக்கிள் விநியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவார்கள் என உறுதி அளித்தார்.

5 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்கள்முன்வந்து பண உதவி செய்தனர். ஹோண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் உதயமானது.

முதலில் தயாரான மோட்டார் சைக்கிள் குறித்து விமர்சனங்கள் வந்தபோது, தானே உலோகம் உருக்கும் கூடத்தில் அமர்ந்து, அழகான வடிவமைப்புடன் அற்புதமான மோட்டார் சைக்கிள் வகைகளை கொண்டு வந்தார்.

அவமானகரமான தொடர் தோல்விகளுக்குப் பின்னர் பெரும் வெற்றி பெற்றார் சாய்க்கிரோ ஹோண்டா.

இப்போது ஹோண்டா நிறுவனம் ஆண்டுக்கு சுமார் 2 கோடி மோட்டார் வாகனங்களை தயாரிக்கிறது.

ஹோண்டா கார்களுக்கு மேற்கத்தேய நாடுகளிலும் பெரும் வரவேற்பு இருந்தது. எத்தனையோ வகை வகையான தயாரிப்புக்களில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளது இந்த நிறுவனம்.

ஹோண்டா தயாரிப்புகளைப் பார்க்கும் போதெல்லாம் அனைவருக்கும் நினைவுக்குவருவது, அதன் மாமனிதன் சாய்க்கிரோ ஹோண்டா தனது வாழ்க்கை அனுபவங்களைச் சாறுபிழிந்து சொன்ன வார்த்தைகள்தான்: **"வெற்றி என்பது 99 சதவீத தோல்வியே".**

# MIND AND BODY PRACTICE

Despite all its popularity, today very few of us truly know what meditation is. Some regard meditation is the mental concentration on something, others consider that we meditate when we imagine something that gives us peace or satisfaction. All these methods are being with one goal to slow down and eventually, completely stop the incessant activity of our minds. These exercises are not really meditation- they are substitutes for meditation because it is normally very difficult to stop our minds all-together. In reality, meditation is a state of thoughtless awareness. It is not an act of doing - it is a state of awareness. We either in this state or we are not, regardless of what we are doing in life. Truly, a man can be in meditation while doing his day's labors as another man can be very far from meditation while sitting in a lotus posture on the top of a mountain.

When we take a look at the various explanations of meditation, another thing we often see is that meditation is defined as taking a moment to sit quietly or to ponder. True meditation, however is much more than this. It is a state of profound, deep peace that occurs when the mind is calm and silent, yet completely alert. This is just the beginning of an inner transformation that takes us to a higher level of awareness. This enables us to fulfill out true human potential. The problem of course, is how to achiever this state.

## Meditation is not...

Concentration is an effort to fix the attention on a particular object or idea for a long period of time. The techniques used in visualization are another type of Sounds, voices, colors and involuntary movements have nothing to do with meditation or spirituality. These are symptoms of loss of awareness and loss of control over some parts of ourselves.

Exercises, such as postures and breathing, do not constiture meditation. They may help establish some balance if under the guidance of a true master (a realized soul). Their practice without a true spiritual goal only leads to an imbalance in the right channel.

Thoughtless awareness is achieved through the raising of the Kundalini. To get rid of blockages that prevent her ascent, we use the hands and introspection but never mental effort (e.g., the continuous repetition of "I must stop thinking").

(1) Meditation is seen by a number of researchers as potentioally one of the most effective forms of stress reduction.

(2) While stress reduction techniques have been cultivated and studies in the west approximately 70 years, the data indicates that they are not consistently effective.




Meditation however, has been developed in Eastern cultures and has a documented history of more than several thousand years. Eastern meditative techniques have been developed, trialed and refined over hundreds of generations with the specific intention of developing a method by which the layperson can regularly attain a state of mental peace and tranquility, for ex., relief from stress. It is a strategy that can easily be adapted to the needs of clinicians and their patients in the west.



Meditation can be an effective form of stress reduction and hass the potential to improve quality of life and decrease healthcare costs.

**G. Ram Mohan**

# DO YOU KNOW DINDIGUL HISTORY?





**Dindigul** is a city and district headquarters in Tamil Nadu state of southern India was carved out of the composite Madurai District on 15.9.1985 and the first District Collector was Thiru.M.Madhavan Nambiar, I.A.S. Dindigul District had the names of Dindigul Anna , Quaid-e-Milleth and Mannar Thirumalai. Dindigul, which was under the rule of the famous Muslim Monarch, Tippusultan, has a glorious past.

The historical Rock Fort of this district was constructed by the famous Naik King Muthukrishnappa Naicker. Dindigul district is the 11th-largest urban agglomeration based on the 2011 census in Tamil Nadu. The name Dindigul comes from a portmanteau of “Thindu” meaning pillow and “kal” meaning rock and refers to the bare hill dominating the city’s both land and skyscape. While it is largely known as the “City of Locks, Briyani City, Textiles and Tannery”.

**- District Reporter Mubarugh**



# பசுவின் சிறப்பம்சங்கள்

இந்தியாவில் குஜராத் மாநிலத்தில்தான் பசுவதைத் தடை சட்டம் மிகத் தீவிரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

நேபாளம் நாட்டில் பசுவை கவுரவிக்கும் வகையில் அதை அந்த நாட்டின் தேசிய விலங்காக அறிவித்துள்ளனர்.

கோபூஜை நடத்தும் போது கண்டிப்பாக பசுவுடன் அதன் கன்றும் இருக்க வேண்டும்.

பசுவின் வாயில் கலிதேவதை இருப்பதால்தான் பசு முன் பகுதியில் பூஜை செய்யப்படுவது இல்லை.

சஷ்டியப்பூர்த்தி, சதாபிஷேகம் போன்ற நாட்களில் பசு தானம் செய்தால் கூடுதல் புண்ணியம் கிடைக்கும்.

ஒரு பசு முதல் கன்று பிரசவித்ததும், அதை தேனு என்பார்கள். இரண்டாவது கன்று பிரசவித்ததும் அதற்கு “கோ’’ என்றழைப்பார்கள். எனவே இரண்டாவது கன்று பிரசவித்த பசுவைத்தான் கோ பூஜைக்கு பயன்படுத்துவார்கள்.

காமதேனு பசு மூவுலகிற்கும் தாயாக கருதப்படுகிறது. பசுவின் கால் தூசி நம் மீது படுவது கங்கையில் புனித நீராடலுக்கு சமம் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

பசுவுக்கு தினமும் பூஜை செய்வது என்பது பராசக்திக்கு பூஜை செய்வதற்கு சமமாகும்.

பசுவின் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்ட வசுக்களும், நவக்கிரகங்களும் ஆட்சி செய்கின்றனர்.

கோபூஜை செய்வதால் கிடைக்கும் உடனடி நன்மை என்ன தெரியுமா? பணக் கஷ்டம் நீங்கும்.

பசுவை 108 போற்றி சொல்லி வழிபட்டால் பல புராதனக் கோவில்களுக்கு சென்று வந்த பலன் கிடைக்கும்.

வீட்டில் பசு வளர்ப்பது செல்வ செழிப்பை உண்டாக்கும்.

பசுவுக்கு அகத்திக்கீரை கொடுக்க இயலாவிட்டால் வாழைப்பழம் வாங்கிக் கொடுக்கலாம்.

பசுக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை கேட்க முடியாது. எனவே குறிப்பறிந்து பசுக்களுக்கு உதவ வேண்டும்.

பசுக்களை அடிக்கடி நீர் நிலைகளில் நீந்தி குளிக்க வைப்பது நல்லது.

பசுவின் கோசலத்தில் (கோ முத்திரம்) அதிகமான நன்மை பயக்கும் நுண் உயிர்கள் வாழ்கிறது.

உங்களால் வீட்டில் உள்ள பசுவை பராமரிக்க இயலாவிட்டால், அதை அடி மாடாக விற்காமல், ஏதாவது ஒரு கோ சாலையில் சேர்த்து விடுவது நல்லது.

பசுக்கள் இறந்தால், அவற்றுக்கு உரிய முறையில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட வேண்டும்.

பசுவையும் கன்றையும் பிரிக்கும் பாவத்தை ஒரு போதும் செய்யக் கூடாது.

பசுவானது பால் கறக்கும் நிலையில் இருக்கும் போது தானம் செய்வதுதான் மிக சிறந்த தானமாகும். பால் கறக்கும் பாத்திரமும் கொடுப்பது இன்னும் சிறப்பானது.

சிலர் பசுவுடன் காளையையும் சேர்த்து தானம் அளிப்பார்கள். இந்த தானம் கூடுதல் பலன் தருவதாகும்.

ஒரு காரியம் வெற்றி அடைய வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அதற்காக கோ தானம் செய்து பாருங்கள். நிச்சயம் வெற்றி உண்டாகும்.

பசு தானம் வாங்குபவர்கள் லட்சம் தடவை காயத்ரி மந்திரம் சொன்னால் சுமை குறையும்.

ஏதாவது மங்கல நிகழ்ச்சி நடக்கும்போது பசுதானம் செய்தால், அதற்குரிய நன்மை கிடைக்கும்.

பசு தானம் கொடுக்கும் போது ஜெர்சி இன பசுக்களை தானம் வழங்கக் கூடாது. நாட்டு பசுவையே தானமாக கொடுக்க வேண்டும்.

சனீஸ்வரனுக்கு காராம்பசு தானம் கொடுப்பது நல்லது.

சூரிய பலம் பெற விரும்புபவர்கள் சிவப்பு நிற பசுவை தானமாக கொடுக்க வேண்டும்.

பசுவை மாடு என்று அழைக்காமல் பசுத்தாய், கோமாதா என்று அழைத்தால் சொர்க்கத்தில் இடம் கிடைக்கும்.

நன்றாக பால் கறக்கும் பசுக்களை காசியில் தானம் செய்தால், அவர்களது 7 தலைமுறை பலன் அடையும்.

ராமேசுவரத்தில் காராம் பசு தானம் செய்தால் ஆண் வாரிசு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஒரு பசுவை ஒருவருக்கு மட்டுமே தானமாக கொடுக்க வேண்டும்.

மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவர், அவரது பாவங்கள் நீங்கி நற்கதி அடைய பசு தானம் செய்வதை நம் முன்னோர்கள் வழக்கமாக வைத்திருந்தனர்.

பித்ருபூஜை செய்யும் போது பசு தானம் கொடுப்பது மிகுந்த நன்மை தரும்.

36. ஒரு பெண் ருதுவானதும் தோஷங்கள் நீங்க பசுக்களை தானம் செய்யலாம்.

கோவில்களில் விளக்கேற்ற பசுக்களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் தானம் செய்வதை ஆதி தமிழர்கள் வழக்கத்தில் வைத்திருந்தனர்.

பசு தானம் அடிக்கடி செய்வது வம்ச விருத்தியை உறுதி செய்யும் என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

பசுவையும் கன்றையும் யார் ஒருவர் நன்கு பராமரிப்பு செய்கிறாரோ, அவரது இருபத்தோரு தலைமுறைக்கு நற்கதி உண்டாகும்.

கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கறுப்பு நிற பசுவை தானம் செய்தால் பரிகாரம் உண்டாகும்.

திருவண்ணாமலை கிரிவல பாதையில் நிறைய பேர் பசுவுக்கு அகத்திகீரை வாங்கிக் கொடுப்பதை பார்த்து இருப்பீர்கள். பசுவுக்கு ஒரு தடவை அகத்தி கீரை கொடுத்தாலே, பிறவி பாவம் விலகும் என்பது ஐதீகம்.

நம் வீட்டில் பசு வளர்க்க வாய்ப்பு இல்லையெனில் பசு வைத்திருப் பவர்களுக்கு நாமாக உதவ வேண்டும்.

வீட்டில் பசு இல்லாதவர்கள் அன்றாடம் ஒரு வேளையாவது ஏதாவது பசுவிற்கு ஒருபிடி அறுகம் புல்லோ, வாழைப்பழமோ, அகத்திக் கீரையோ, பிறதீவனமோ கொடுக்க வேண்டும்.

வெளிப்புறம் மேயும் பசுக்களுக்கு நம் வீட்டின் அல்லது தோட்டத்தின் வெளிப்புறம் தண்ணீர் தொட்டி அமைக்கலாம்.

பசுக்கள் தொழுவத்தில் கட்டிப் போடப்பட்டிருக்கும் வரை சாணத்தையும், கோசலத்தையும் அவ்வப்போது அப்புறப்படுத்தி தொழுவத்தைக் கழுவிவிட வேண்டும்.

விளை நிலங்களில் சிறு பகுதியையாவது வருடந்தோறும் மாறி மாறித் தரிசாக விடுவது நிலங்களுக்கு நல்லது. மாடுகளுக்கும் புல் மேய்விடம் கிடைக்கும்.

வசதியுள்ளவர்கள் வழிப்போக்கு மாடுகளுக்காக சிறிதளவு வைக்ககோல் போட்டு வைக்க வேண்டும்.

பசுங்கன்று பால் மணம் மாறும் முன்பே சினைப்படுத்தி, கன்று ஈனச் செய்து பால் கறப்பது முறையல்ல.

நமக்கு வருவாய் அளிக்க இயலாத நலிந்த பசு மாடுகளை, பசுக்களை பராமரிக்கும் பசு மடங்களிலும் தொழுவங்களிலும் சேர்ப்பிக்க வேண்டும்.

**திருமதி. சுஜாதா மூர்த்தி**

## பாலின் பல வடிவங்கள்

**காய்ச்சி அருந்தலாம்.**
**புளித்த மோரைச் சேர்த்து பின் தயிராகும்.**
**தயிரைக் கடைந்தால் மோராகும்.**
**மோரை கடைந்தால் வெண்ணையாகும்.**
**வெண்ணையை உருக்கினால் நெய்யாகும்.**
**அரை லிட்டர் பாலின் விலை ரூ.20**
**அரை லிட்டர் நெய்யின் விலை ரூ.100**
**பாலின் மதிப்பு இப்போது புரிகிறதா ?**

# பதிவின் போதே பட்டாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்!

தொடர் 6



நாம் வாங்கும் நிலத்தை பத்திரப் பதிவுத் துறையின் மூலம் பதிவு செய்யும்போதே, பட்டா மாறுதலுக்கான மனுவும் சேர்த்தே சமர்ப்பிக்கிறோம். பதிவுத் துறையின் மூலமாகவே, நமது 'பட்டா மாறுதல் மனு' வருவாய்த் துறையினருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி, வருவாய்த் துறையினர் இயல்பாகவே, நாம் வாங்கிய நிலத்துக்கான பட்டாவில் பெயர் மாறுதல் செய்து, நமக்குத் தர வேண்டும். அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு 1984. ஆனால், நடைமுறை அப்படியா இருக்கிறது? இல்லவே இல்லை!

நிலத்தைப் பதிவு செய்துவிட்டு, 'பட்டா பெயர் மாறுதலுக்காக' வி.ஏ.ஓ., விடம் போகிறோம். அவர் குறைந்த பட்சம் 4000 ரூபாயில் தொடங்கி நம்மிடம் எதிர்பார்க்கிறார். வெறும் பட்டா பெயர் மாறுதலுக்கோ, உட்பிரிவு உள்பட பெயர் மாறுதலுக்கோ 'சல்லிக்காசு' கூட கட்டணமில்லை. ஆனால் அவரோ, தாசில்தார், மண்டல துணை தாசில்தார் உள்பட, வருவாய்த் துறையின் அத்தனை மேஜைகளுக்கும் படியளந்துதான் பட்டா பெற முடியும் என்பதாக நம்மிடம் 'அளந்து', நம்மிடம் எதிர்பார்க்கும் தொகைக்கான 'பங்குத் தொகைப் பிரிப்புப் பட்டியலை' விரிக்கிறார். இந்தக் கொள்ளையை எதிர்த்து, சமூக ஆர்வலர் திரு ஓ.பரமசிவம் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்குத் தொடுத்துள்ளார். தலைமை நீதிபதி திரு. சஞ்சய்கிஷன் கவுல் மற்றும் நீதிபதி எஸ்.தமிழ்வாணன் ஆகியோர், தமிழக அரசின் 1984ஆம் ஆண்டு அரசாணையின்படி எவ்விதக் கட்டணமுமின்றி உடனடியாகப் பட்டா பெயர் மாறுதல் செய்து வழங்கிட ஆணையிட்டுள்ளனர். மேலும், "நிலம் பதிவு செய்யும்போதே, பட்டா மாறுதலுக்கான மனுவும் பெறப்படுவதால், பதிவு செய்த ஒரு மாத காலத்துக்குள் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து உரியவருக்கு வழங்கப்பட வேண்டும்: புதிதாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை!" என்றும் அத் தீர்ப்பில் ஆணையிட்டுள்ளனர்.

மோசடியில் இறங்கும் தரகர்கள், புதிதாக நிலம் வாங்க துடிக்கும் நபர்களிடம் தங்களின் வேலையைக் காட்ட ஆரம்பித்து விடுகின்றனர்.

நிலம் வாங்கும் விவரம் குறித்து தெரியாத நபராக இருந்தால் தரகர்களுக்கு இன்னும் வசதி. ஒவ்வொருவர் நாமாக போய் தரகர்களிடம் ஏமாந்து விடக் கூடாது என்று புத்திசாலித்தனமாக பெரிய நிறுவனத்திடம் போவார்கள். அங்குதான் தெரியும் அந்த நிறுவனத்தின் புத்திசாலித்தனம்.

பெரிய நிறுவனம் பல ஆண்டு அனுபவம் உள்ளவர்கள் என்பதால், மோசடி செய்யமாட்டார்கள் என்று மக்கள் நம்புகின்றனர்.

இப்போதைய நிலையில் தனி நபர்கள் மட்டுமல்லாது பெரிய நிறுவனங்களையும் ஏமாற்றிவிடும் அளவுக்கு நில மோசடி திறமையுடன் நடைபெறுகிறது.

கட்டுமான நிறுவனங்களுக்கு விற்றவர்களின் உரிமையில் எழும் சிக்கலே முக்கிய காரணமாக உள்ளது. பெரும்பாலும் தரகர்களே இவர்களுக்கு

**விளம்பரம் பார்த்து மனை வாங்கப் போறீங்களா!!!**



**மனைவி** : எந்தக் காரணமும் இல்லாமல் குடிக்கமாட்டேனு சொன்னீங்களே இப்போ எதுக்கு குடிச்சீங்க?

**கணவன்** : அது ஒண்ணுமில்லைடி... தீபாவளி ராக்கெட் வைக்க பையன் பாட்டில் வேணும்னு கேட்டான் அதான்...

பக்கபலமாக செயல்படுகின்றனர். மேலும் நிலங்களின் உண்மை நிலவரங்கள் தரகர்களால் மறைக்கப்படுவதே பல இடங்களில் மோசடி நிலங்கள் விற்பனையாவதற்கு முக்கிய புள்ளியாக உள்ளது.

தரகர்கள் தங்களுக்கு சேரவேண்டிய கமிஷன் தொகையை மட்டுமே முக்கிய நோக்கமாக கொண்டு உள்ளார்கள். இந்த நோக்கமே நில மோசடி சம்பவங்கள் அதிகரிக்க முக்கிய காரணமாக உள்ளது.

எனவே புதியதாக நிலம் வாங்குவோர் தரகர்களின் வார்த்தைகளுககு எந்த முக்கியத்துவம் கொடுக்காமல் நிலங்களின் உண்மையை அறிந்து கொள்வதன் மூலம் நில மோசடியிலிருந்து தப்பிக்கலாம்.

ஒன்றிரண்டு கமிஷனுக்காக உண்மையை மறைந்து நில மோசடியாளர்களுக்கு துணைபோகும் தரகர்களை கடுமையாக தண்டிக்க, உரிய சட்ட வழிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும்.

பொதுவாக இன்றைய சூழலில், புதிதாக எப்படியாவது வீடு வாங்க முடியாதா? என்று ஒவ்வொருவருக்கும் கனவு இருக்கும். இதில் ஏற்கனவே வீடு வாங்கிய சிலர், முதலீடு நோக்கில், இரண்டாவதாக வீடு அல்லது மனை வாங்க நினைக்கின்றனர். இதில், வீடு வாங்குவதா அல்லது மனை வாங்குவதா என்பதில், மக்கள் மத்தியில் குழப்பம் நிலவுகிறது.

பொதுவாக பலரும் மனை வாங்கி போடுவதைவிட, கட்டிமுடிக்கப்பட்ட வீட்டை வாங்கிப் போடுவதே நல்லது என்று நினைக்கின்றனர். இவ்வாறு வீடு வாங்கினால் அந்த நிலத்தில் உங்களுக்கு கிடைக்கும் பங்கு யு.டி.எஸ். அடிப்படையில் மதிப்பு உயருமே தவிர, கட்டிடத்தின் மதிப்பு குறையும். நிலத்தின் மதிப்பு அதிகரிக்கும் இடங்களில் மட்டுமே கட்டிடத்தின் மதிப்பு குறைந்தாலும், எதிர்கால விற்பனை நேரும்போது லாபம் கிடைக்கும். நீங்கள் முதலீட்டிற்காக வீடு வாங்கி இடத்தில், நிலத்தின் மதிப்பு எதிர்பார்த்த அளவுக்கு உயராவிட்டால், வீட்டின் மதிப்பு உயராது.



இரண்டாவது வீட்டை நாம் எதற்கு வாங்குகிறோம்? அதில் வாடகை வாயிலாக குறிப்பிட்ட அளவுக்கு வருவாய் கிடைக்கும் என்பதற்காக... எனவே முதலீட்டுக்காக வாங்கும் இரண்டாவது வீட்டை, விற்பனை செய்யும்போது தான் இழப்பு எற்படலாமே தவிர, அதற்கான வாடகை ஆண்டுதோறும் அதிகரித்தே வரும்.

அதிக செலவு செய்து வாங்கிய சொத்தை 10 ஆண்டுகளுக்கு பிறகு 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யலாம். ஆனால், மனைகள் விவகாரம் அப்படியல்ல.. ஒரு இடத்தில், 5 லட்சம் ரூபாய்க்கு வாங்கிய மனையை 10 ஆண்டுகள் கழித்து 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யலாம்.

அப்படி பார்த்தால் 20 லட்சம் முதலீடு செய்த சொத்தை 10 ஆண்டுகளில் 10 லட்சம் லாபம் எடுப்பது ஒருபுறமிருக்க... 5 லட்சம் முதலீடு செய்து அதே 10 ஆண்டுகளில் 10 லட்சம் ரூபாய் லாபம் பார்த்தவர்களும் உண்டு. இதில் தங்களுக்கு எது விருப்பமோ அதை தேர்ந்தெடுப்பது உங்கள் கையில்தான் உள்ளது.

தொடரும்...

ஆசைக்கு கடன்வாங்கி நிலத்தை வாங்கிப் போட்டு விட்டு இடத்தில் வீடு கட்ட முடியாமலும்,, கடனைக் கட்ட முடியாமலும் திண்டாடுபவர்கள் பலர்...

எனவே எதையும் திட்டமிட்டு செய்ய வேண்டும்.

ஆசிரியர் எம்.எஸ்.எம்.

# கல்விச்சாலையா? தொழிற்சாலையா?

**பணம் நோக்கில் கல்வி நிறுவனங்களை குறை சொல்பவர்களுக்கு மத்தியில் பொதுநலம் கருதியே மித்ரா டைம்ஸ் இந்தக் கருத்தினை முன் வைக்கிறது. தனியார் பள்ளிகள் எங்கள் நோக்கத்தினை புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.**

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க! என்று நம் முன்னோர் வாழ்த்துவார்கள். அந்த பதினாறு என்பது பிள்ளை குட்டிகள் என்றுதான் ரொம்பநாளா அதாவது என்புத்திக்கு எட்டும்வரை நினைச்சுக்கிட்டிருந்தேன். அப்புறம்தான் ஒரு நாள் தமிழ் ஆசிரியர் பதினாறு செல்வங்கள் என்கிறது புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மைகள், பொன், தான்யம், அழகு, இளமை, நல்வாழ்வு, அறிவு, பெருமை, துணிவு, நோயின்மை, நுகர்ச்சி, நீண்ட வாழ்வு என்பதுதான் அது என்று சொன்னபிறகுதான் தெரிந்தது.



பதினாறில் கல்வி தலையாய ஒன்று. கல்வி வந்தால் பதினாறில் புகழ், ஆற்றல், வெற்றி, நன்மைகள், அறிவு, பெருமை என்று பெரும்பாலும் கிடைத்துவிடும்.

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றவை பிற”** என்றார் வள்ளுவர். ஒரு காலத்தில் கற்பவருக்கு சமுதாயத்தில் உயர்

## பின்லாந்து கல்வி முறை

- எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்கு கல்விதான்...
- ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை...
- ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான். அந்த நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு மற்றும் பிற கலைகளுக்கும் உண்டு.
- ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வறை இருக்கும். படிக்கப்பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால் மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்...
- முக்கியமாக, 13 வயது வரை ரேங்கிங் என்ற தரம் பிரிக்கும் கலாச்சாரம் கிடையாது... பிராக்ரசு ரிப்போர்ட் தந்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது.
- தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
- கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை.
- ஒரு பள்ளியில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம். அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது.
- முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம். அனைவருக்கும் சம தரமுள்ள என்ற உத்தரவாதம் உள்ளது.
- பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பின்பற்றுகின்றனர். அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல்கின்றனர்.
- தேர்வுகளை அடிப்படை முறைகளாக இல்லாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர்.
- உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது.
- பின்லாந்து கல்வி முறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர்... உலகின் 56 நாடுகளிலிருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர்.

"தவழும் கண்ணனைப் போல தவழும் விநாயகர் வேலூர் ஜலகண்டீஸ்வரர் ஆலயத்தில் துதிக்கையில் கொழுக்கட்டையுடன் தவழ்ந்தபடியே பின்புறம் திரும்பிப் பார்க்கும் கோலத்தில் அமைந்துள்ளார்."

மதிப்பிருந்தது. ஆனால் கல்விச் சாலைகள் தொழிற்சாலைகளைப் போல் PRODUCTION ஒன்றையே குறிக்கோளாக செயல்படுவதால், கல்விக்கும் கற்பவருக்கும் பெருமை குறைந்துவிட்டது.

இந்தக் காலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் புற்றீசல் போல் பெருகி உள்ளது. 40 வருடங்களுக்கு முன் 5 வயதில் 1-ம் வகுப்பு சேர்ப்பார்கள். 1-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு பி.யு.சி. பட்டபடிப்பு என்று இருந்தது. பின்னர் 1977-க்கு பிறகு 10-ம் வகுப்பு 11, 12-ம் வகுப்பு (+2) என்று மாறியது.

தனியார் கல்வி நிறுவனங்களில் இப்போது 2½ வயதில் Play school, 3 வயதில் Pre K.G., 4 வயதில் L.K.G., 5 வயதில் U.K.G., 6 வயதில் I-STD, 7 வயதில் II-STD, என தொடர்கிறது.

அரசுப் பள்ளிகளில் 9-ம் வகுப்பு முடித்த பின்னே 10-ம் வகுப்பு பாடமும், 11-ம் முடித்து 12-ம் வகுப்பு பாடமும் நடத்தப்படும்.

ஆனால் தனியார் நிறுவனங்கள் தங்களின் பெருமையை நிலைநாட்ட அரசுத்தேர்வில் தனியார் பள்ளி மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற 9-ம் வகுப்புகளை பாதியில் நிறுத்திவிட்டு, 10-ம் வகுப்பு PORTION எடுக்கிறார்கள். ஏறத்தாழ 1½ வருடம் நடைபெறும் 10ம் வகுப்பும், 11ம் வகுப்பு பாதியில் 12ம் வகுப்பு (+2) பாடமும் நடத்திட அதையும் 1½ வருடம் முடித்து அரசுப் பள்ளி மாணவர்களை கூட அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார்கள். கல்லூரி செல்லும்போது அந்த மாணவனுக்கு 11-ம் வகுப்பு பாடமே வரும்போது அதை படிக்க முடியாமல் திணறுகிறான். ஏறத்தாழ தொழிற்சாலைகளில் செய்வதைப் போலவே மாணவர்களை தேர்வுக்கு தயார்படுத்துகிறார்கள்.

பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் தனியார் நிறுவனத்தில் படித்தால் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். படிப்பின் முடிவில் Campus Inverview-ல் ஒரு பெரிய கம்பெனியில் சேர்த்து விடலாம். அதன் மூலம் வெளிநாட்டுக்கு மகனை அனுப்பி நிறைய சம்பாதிக்கலாம் என்று கனவு காண்கிறார்கள்.



வெளிநாட்டில் உள்ள மகன் பெற்றோருக்கு கடமைக்கு பணத்தை அனுப்பிவிட்டு அந்த நாட்டுக் கலாச்சாரத்தில் தன்னை அடிமைப் படுத்திக் கொள்கிறான். சமீபத்தில் ஒரு கதையில் தாயின் மரணத்தைக்கூட நேரில் வந்து பார்க்க முடியாமல் skpe-ல் பார்த்ததாக படித்தோம்.

அறிவு வளர்ச்சிக்கு உதவிய கல்வி பின்னாளில் உறவுகளை பிரிந்து வாழும் நிலைக்கு தள்ளுகிறது. சின்னவயதில் புத்தக மூட்டைகளை சுமக்க முடியாமல் சுமந்து காலையில் அரக்கப் பரக்க வாயில் ஊட்டி பாதி தரையில் சிந்திட தாய் சோறு ஊட்டிவிட்டு டிரஸ், ஐ.டி.கார்டு ஷூ, டை பெல்ட் மாட்டிவிட்டு பரபரப்பாய் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்கிறார்.

வெளிநாட்டுக்கு செல்லும் மகன் தன்னுடைய பரபரப்பான பழைய சூழலிலிருந்து வெளிபட்டு அந்த நாட்டு மிதமான சூழ்நிலைக்கு பழகிப்போக இந்தியா வர விரும்புவதில்லை. வெளிநாட்டுக் கல்வி முறையை நாம் பார்ப்போம். குறிப்பாக பின்லாந்து நாட்டின் கல்வி முறையைப் பார்ப்போம்.

கல்விச் சாலைகள் தொழிற்சாலைகளாக மாறி விட்டது.குறிப்பாக தனியார் கல்வி நிறுவனங்கள். மாணவர்கள் எல்லாவிதத்திலும் பீஸ் என்ற பெயரில் வேட்டையாடுகிறார்கள்.

அந்தகாலத்தில் வீட்டு வரி, தலவரி, மேய்ச்சல் வரி, சாலை வரி என்று மன்னர் காலத்தில் போடப்பட்டதைப்போல டிரான்ஸ்போர்ட், லைப்ரரி, கல்சுரல் என்று பீஸ் வசூலிக்கிறார்கள். ஒரு வருடத்துக்கு ஒரு மாணவனுக்கு இவ்வளவு தொகை வசூலிக்க வேண்டும் என்று Target பிக்ஸ் பண்ணி தொழிற்சாலைகளில் **PRODUCTION TARGET** போட்டு வேலை செய்வதைப் போல செய்கிறார்கள்.

இந்நிலை மாறுமா! மாணவர்கள் அறிவின் அடிப்படையில் கல்வி பெறுவார்களா?

**ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி**



**இந்த புன்னகை என்ன விலை?**

**வெளியில் அழகு படுத்திக் கொள்வதைக் காட்டிலும், துர்நாற்றம் இல்லாமல் சுத்தமாக இருப்பதே அவசியம். சாப்பிட்ட பிறகு கிராம்பு மெல்வது கூட நல்ல பலனைத் தரும். அதிக சூடான, குளிச்சியான பொருட்களை பல்லில் படாமல் சாப்பிடுவதும் நல்லது. எலுமிச்சை, ஆரஞ்சு ஜூஸ், ஆபிள் சிடார் வினிகர் போன்றவற்றை கூட ஸ்ட்ரா கொண்டு பல்லில் படாமல் குடித்தால் பற்கள் பாதுகாக்கப்படும். இப்போது பிரஷ்ஷிலேயே டங்க் க்ளீனர் வைத்து வந்திருக்கிறது. அதனைக் கொண்டே ஈறுகளையும் மசாஜ் செய்து விட முடியும். இரவு உறங்கும் முன் பல் துலக்கும் பழக்கம் குழந்தைகளாக இருக்கும்போதே பழக்கிவிட வேண்டும். மவுத்வாஷ் உபயோகிப்பதைக் காட்டிலும் தினமும் இரு வேளை பிரஷ் கொண்டு பல் துலக்குவதே சிறந்தது.**




### தீபாவளி உற்சாகம் எப்படி ?

தமிழக மக்கள் எந்தப் பண்டிகையையும் “ஸ்வீட் எடு. கொண்டாடு” என்று கொண்டாடுவார்கள். குறிப்பாக, தீபாவளி பொங்கல் உற்சாகம் களைக்கட்டும். ஆனால் கரும்பு விவசாயிகள் போராட்டம், பண்டிகைக்கு 2 நாட்கள் முன்பு வரைக்கும் போனஸ் வரலைனு கேட்டு போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம் என சில இடங்கள் களையிழந்து இருந்தது.

### ஓ.பி.எஸ். எப்படி ?

நித்யகண்டம் பூரண ஆயுசுங்கற மாதிரி இருக்கு. ஆனா இல்லைங்கற மாதிரி இருக்காரு. ஒரு பக்கம் சசிகலாவின் எதிர்ப்பு என்றிருக்க, இன்னொரு பக்கம் எடப்பாடி பழனிச்சாமி வேறு எடக்குப்பாடி பழனிச்சாமியாக இருக்கிறார். இருதலைக் கொள்ளி எறும்பு என்பதற்கு ஓ.பி.எஸ். ஒரு உதாரணம்.



### வை.கோ. ஏன் இந்த அளவுக்கு தி.மு.க.வை வெறுக்கிறார் ?

காவிரிப் பிரச்சினை தொடர்பாக சர்வக்கட்சி கூட்டத்துக்கு ஸ்டாலின் ஏற்பாடு செய்தப்போ அதுல கலந்துக்கலாமுன்னு திருமாவளவன் முடிவெடுத்தார். அதை வை.கோ. முறியடித்தார். அவர் ஸ்டாலின் மேல் கடுப்பா இருக்காரு. இருக்காதா பின்ன? ம.தி.மு.க.விலிருந்து கட்சியிலிருந்து வாரம் ஐநூறு பேரை தி.மு.க.வுக்கு தூக்கிட்டு வந்துடுறாங்களே.. திருப்பரங்குன்றம் தேர்தலில் போட்டியிடுற தி.மு.க. வேட்பாளர் சரவணன் சமீபத்தில் ம.தி.மு.க.வில் இருந்து வந்து சேர்ந்த முக்கியப் புள்ளி

# எம் பதில்கள்





**காவிரிப் பிரச்சனை ஓய்ஞ்சுடுச்சா?**
ஒரு பிரச்சனை வரும்போது இன்னொரு பிரச்சனை மறைந்துவிடும். போகப் போக மக்களும் அதை மறந்து விடுவார்கள். சுவாதி கொலை -ராம்குமார் தற்கொலை விவகாரம், ரயிலில் துளை போட்டு கொள்ளையடிக்கப்பட்ட 500 கோடி என இந்த விஷயங்கள் லிஸ்ட்ல காவிரி பிரச்சனையும் சேந்துரும்.

**எல்லோரும் முதலமைச்சர் ஜெயலலிதாவை பார்த்தபோது விஜயகாந்த் மட்டும் ஏன் பார்க்கவில்லை?**
அவரு இன்னும் பழச மறக்கல போல..

**ஒரு வார இதழில் அழகிரி பத்தி கருணாநிதி தெரிவித்த கருத்து சரிதானா?**
“நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. படுதோல்வி யடைந்ததற்கும், சட்டமன்றத் தேர்தலில் சில தொகுதிகள் இழப்பிற்கும், அழகிரியின் உள்குத்து வேலைதான் காரணம் என்பதை அனைவரும் அறிவர். என்னதான் மகனாக இருந்தாலும் தன்னால் கடுமையாக உழைத்து வளர்க்கப்பட்ட கட்சிக்கு தோல்வியை ஏற்படுத்திக் கொடுத்த காரணத்தால், அவரின் செய்கையை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் எங்க தளபதி தலைவரைப் போலவே கட்சியை காப்பாற்ற கடுமையாக உழைக்கிறார்.” அப்படின்னு ஒரு தி.மு.க. உடன் பிறப்பு என்கிட்ட பெருமையா சொல்றாரு. இப்ப சொல்லுங்க...அழகிரியை கருணாநிதி ஏன் வெறுக்கிறார்னு.

**உங்களுக்கு தெரியுமா?**



*பழங்காலத்திலிருந்தே நுனிகோபுரம் (பிரமிட்) உருவ கட்டிடங்கள் வீடுகள் கட்டுப்பட்டுள்ளன. இக்கோபுர வடிவமானது தலைமைத் தகுதிகள் நிறைந்ததாகவும், ஆற்றல், சக்திக்கு வித்திடும் அமைப்பைக் கொண்டதாகவும் கருதப்படுகிறது. குடியிருக்கும் வீட்டின் கூரையை நுனிக்கோபுர உருவகத்தில் அமைப்பதால் அந்த வீட்டில் வாழ்பவரின் ஆயுட்காலம் வளர்ச்சியடையும். இந்த நுனிகோபுரங்கள் நாம் வேலை செய்யும் மேஜையில் வைப்பதால் இவை நமது ஆற்றல்கள் பெருகி வளமை உண்டாக உதவுகின்றன.*



# தமிழகத்துக்குக் குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதி

விஷ்ணுவின் முக்கிய அவதாரமான கிருஷ்ணனின் பெயர் கொண்டு விளங்கும் கிருஷ்ணா நதி தென்னிந்தியாவின் பெரிய நதிகளில் ஒன்று. கிருஷ்ணவேணி என்றும் அழைக்கப்படும் இந்த நதியில் நீராடினால், பாவங்கள் அத்தனையும் கரைந்து போகும் என்பது மக்களின் மாறா நம்பிக்கை.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மஹாபலேஷ்வர் என்ற மலைவாச ஸ்தலத்தில், கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து முன்னூறு மீட்டர் உயரத்தில் பசுச் சிற்பமொன்றின் வாயிலிருந்து பெருகி ஓடத் தொடங்கும் கிருஷ்ணா நதி, மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் ஊடே ஆயிரத்து நானூறு கிலோ மீட்டர்கள் ஓடி, பின்னர் ஆந்திர மாநிலத்தில் ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

இந்திய நதிகளில், கங்கை கோதாவரிக்குப் பின்னர் மூன்றாவது பெரிய நதியாக கிருஷ்ணா கருதப்படுகிறது.

ஒருபுறம் இரண்டரை லட்சம் சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கு, வளமான வண்டல் மண் நிறைந்த பகுதியாக விளங்குகிறது என்றால், மறுபுறம் இதன் டெல்டா எனப்படும் கழிமுகப் பிரதேசம் நம் நாட்டின் செழிப்பான பகுதியாகத் திகழ்ந்து வருகிறது.

கிருஷ்ணா நதி மட்டும் அல்லாது அதன் உப நதிகள் பலவும் மக்களது வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. துங்கா மற்றும் பத்ரா என்ற நதிகளின் இணைப்பினால் உருவான துங்கபத்ரா நதி, கிருஷ்ணாவின் முக்கிய உபநதியாகத் திகழ்கிறது. வென்னா, கொய்னா, வாஸ்னா, பஞ்சகங்கா, தூத் கங்கா, மலபிரபா போன்ற உப நதிகள் கிருஷ்ணாவின் வலது பக்கம் சலசலத்து வந்து அந்த நதியுடன் இணைகின்றன என்றால், எர்லா, மூசி, பீமா போன்றவை அதன் இடப்பக்கம் வந்து கலக்கின்றன.

கிருஷ்ணாவின் கரையெங்கிலும் பல புண்ணியத் தலங்கள் அமைந்துள்ளன. ப்ரீதி சங்கம், சங்கமேஷ்வர், நர்சோபவாடி போன்றவை சங்கமங்களில் உள்ள தலங்களாகும். ஆந்திராவின் ஸ்ரீசைலமும், மகாராஷ்டிராவின் ஔடும்பரும் கிருஷ்ணாவின் கரையில் உள்ள புண்ணியத் தலங்களாகும்.

கிருஷ்ணா நதி நீர், விவசாயத்துக்காக மட்டுமில்லாமல் மக்களின் குடிநீர் தேவைகளுக்கான நீர் ஆதாரமாகவும் பயன்படுகிறது. சென்னை நகர மக்களின் தாகத்தையும் இந்த நதியின் தண்ணீர் தனித்து வருகிறது. கிருஷ்ணா நதியால் வளம் பெற்ற பகுதிகளில் அடர்ந்த காடுகள் வளர்ந்து அரிய வகை விலங்குகள், பறவைகள் மற்ற ஜீவராசிகள் ஆகியவற்றின் வாழ்விடமாக விளங்குகின்றன.

ஆனால் தீமைக் கலப்பில்லாத நன்மை என்பதே உலகில் இல்லை எனலாம். கிருஷ்ணா நதியின் கரைகளில் அமைந்திருக்கும் நகரங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களும், சாக்கடைத் தண்ணீரும் நதிநீரை பெருமளவு மாசுபடுத்தி, மக்களின் வாழ்க்கையை பாதிக்கின்றன.

மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் கிருஷ்ணா போன்ற நதிகள் நம் மண்ணின் பொக்கிஷங்கள்! இவற்றைத் தூய்மையாக வைத்துப் பராமரிப்பது நம் கடமை! **எம்.எஸ்.எம்.**

# நலமுடன் வாழ...



- தண்ணீர் நிறைய குடியுங்கள்.
- காலை உணவு ஒரு அரசன்/அரசி போலவும், மதிய உணவு ஒரு இளவரசன்/இளவரசி போலவும்,இரவு உணவை யாசகம் செய்பவனைப் போலவும் உண்ண வேண்டும்.
- இயற்கை உணவை, பழங்களை அதிகமாக எடுத்துக் கொண்டு, பதப்படுத்தப்பட்ட உணவை தவிர்த்து விடுங்கள்.
- உடற்பயிற்சி மற்றும் பிரார்த்தனைக்கு நேரம் ஒதுக்குங்கள்.
- தினமும் முடிந்த அளவு விளையாடுங்கள்.
- நிறைய புத்தகம் படியுங்கள்.
- ஒரு நாளைக்கு 10 நிமிடம் தனிமையில் அமைதியாக இருங்கள்.
- குறைந்தது 7 மணி நேரம் தூங்குங்கள்.
- குறைந்தது 10 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை நடைப் பயிற்சி மேற்கொள்ளுங்கள்.
- உங்களை ஒருபொழுதும் மற்றவருடன் ஒப்பிடாதீர்கள்.
- எதிர்மறையான எண்ணங்களை எப்பொழுதும் மனதில் நினைக்காதீர்கள்.
- உங்களால் முடிந்த அள்வு வேலை செய்யுங்கள்ர அளவுக்கு மீறி எதையும் செய்யாதீர்கள்.
- மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவதில் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள்.
- நீங்கள் விழித்திருக்கும் பொழுது எதிர்காலத்தைப் பற்றி நிறைய கனவு காணுங்கள்.
- அடுத்தவரைப் பார்த்து பொறாமை கொள்வது நேர விரையம்ர உங்களுக்கு தேவையானது உங்களிடம் உள்ளது.
- கடந்த காலத்தை மறக்க முயற்சி செய்யுங்கள்ர
- யாரையும் வெறுக்காதீர்கள்.
- எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம்ர நீங்கள் கற்றுக் கொள்ள வந்திருக்கிறீர்கள் சிக்கல்களும்,பிரச்சனைகளும் இங்கு பாடங்கள்.
- முடியாது என்று சொல்லவேண்டிய இடங்களில் தயவு செய்து முடியாது என்று சொல்லுங்கள்ர இது பல பிரச்சனைகளை ஆரம்பத்திலே தீர்த்துவிடும்.
- வெளிநாட்டிலோ வெளியூரிலோ இருந்தால் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும், நண்பர்களுக்கும்,வேண்டியவர்களுக்கும் அடிக்கடி தொலைபேசியிலோ, கடிதம் மூலமாகவோ தொடர்புகொண்டிருங்கள்.
- மன்னிக்கப் பழகுங்கள்.
- 70 வயதிற்கு மேலிருப்பவர்களையும், 6 வயதிற்கு கீழிருப்பவர்களையும் கவனிக்க நேரம் ஒதுக்குங்கள்.
- அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றி ஒருபொழுதும் கவலை கொள்ளாதீர்கள்.
- உங்கள் நண்பர்களை மதிக்கப் பழகுங்கள்.
- உங்கள் மனதிற்கு எது சரியென்று படுகிறதோ அதை உடனே செய்யுங்கள்.
- ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள்.
- உங்கள் ஆழ்மனதில் இருப்பது சந்தோஷம் தான்ர அதை தேடி அனுபவித்துக் கொண்டே இருங்கள்.
- உங்களுக்கு எது சந்தோஷத்தை கொடுக்காதோ, எது அழகை கொடுக்காதோ, நிம்மதியைக் கொடுக்காதோ அதை நீக்கிவிடுங்கள்.



S.Suruthi Lakshmi
XI-STD
VIDYAA VIKAS MAT. HR. SEC. SCHOOL,
KARAMADAI

## யார் அம்மா ?



**கணவன்** : (போன் ரிஸீவரை பொத்தியபடி) "அடியே, அம்மா பாத்ரூமில வழுக்கி விழுந்துட்டாங்களாம்..."

**மனைவி** : 'வயசான காலத்துல ஓய்ஞ்சு ஒரு இடத்துல உட்கார மாட்டாங்களே, அவங்களுக்கு இது வேண்டியதுதான்!'

**கணவன்** : 'விழுந்தது எங்கம்மா இல்லடி, உங்கம்மா!'

**மனைவி** : 'ஐயோ... அவங்க ஓடியாடுறது மேலே எந்த கொள்ளிக் கண்ணுபட்டுச்சோ... பார்த்துகிட்டு நிக்கறீங்களே... போனைக் குடுங்க!"



# வடிவேலு சொன்னதுக்கு அர்த்தம் இதுதானோ?

**காமெடி நடிகர் வடிவேலு கதாநாயகனாக நடித்து வெற்றிகரமாக ஓடிய திரைப்படம் ''இம்சை அரசன் 23ம் புலிகேசி'' அதில் வரும் சில வசனங்களுக்கான விளக்கம் இதுதானோ என்று கேட்கத் தோன்றுகிறது.**

"பன்றிக்கு நன்றி சொல்லி குன்றின் மேல் ஏறி நின்றால் வென்றிடலாம் குலசேகரனை...''

**விளக்கம் :** குலசேகரன் என்றால் குலத்தை ரட்சிப்பவன் என்று பொருள். ஶ்ரீ என்றால் செல்வம், அந்த செல்வத்தின் அதிபதி லட்சுமியை மணக்க பெருமாளுக்கு பைனான்ஸ் செய்தவர் நம் குபேரன். ஆக பெருமாளின் குலம் பெருக ரட்சித்த குபேரன்தான் பெருமாளின் குலசேகரன். குபேரனுக்கு EMI கட்ட பெருமாளுக்கு பொருளீட்ட ஒரு ஸ்தலம் தேவைப்பட்டது. அப்பொழுது பெருமாளுக்கு ஏழுமலையை அளித்தவர் ஶ்ரீ வராகப்பெருமாள்...

அதனால் பன்றியாகிய ஶ்ரீ வராகப் பெருமாளுக்கு நன்றி சொல்லி, குன்றின்மீது நின்றகோலத்தில் செட்டில் ஆகி மக்களுக்கு அருள்புரிந்து அவருடையை குலசேகரனுக்கு (குபேரன்) சேரவேண்டிய பணத்தை கொடுத்து கடனை வென்றாராம் பெருமாள்.

''தட்டானுக்கு சட்டை போட்டால் குட்டைப் பையன் கட்டையால் அடிப்பான்...''

**விளக்கம் :** தானம் கேட்கும் வறியவர்களுக்கு தட்டாமல் வழங்குபவர் தான் தட்டான். சரி, சட்டை எதற்காக போடுகிறோம்? நெஞ்சை மறைப்பதற்கு. தட்டானுக்கு சட்டை போடுவது என்றால் தானம் கொடுக்க நினைப்பவரின் எண்ணத்தை தடுப்பது, அதாவது அவரின் ஈகை உள்ளத்தை மறைப்பது என்று பொருள்.

நம் மஹாபலிச் சக்கரவர்த்தி 99 அசுவமேத யாகம் செய்துவிட்டு நூறாவது அசுவமேத யாகம் செய்யும்போது பெருமாள் வாமன அவதாரத்தில் வந்து அவரிடம் தானம் கேட்கிறார். ஆனால் சுக்ராச்சாரியார் மஹாபலி தாரை வார்ப்பதைத் தடுக்க வண்டாக உருமாறி கமண்டலத்தின் வாயை நீர் வராதவாறு அடைத்துக்கொள்கிறார். அப்பொழுது நம் குட்டைப் பையன் வாமனர் என்ன செய்கிறார் தெரியுமா?

ஒரு குச்சியை (கட்டை) எடுத்து கமண்டலத்தின் குழாயை குத்தி சுக்ராச்சாரியருக்கு ஒரு கண் ஊனமாகி விடுமாறு செய்கிறார்.

---



# கண்விழித்ததும் கைகளைப் பார்ப்பதேன்?

நம் உறுப்புகளில் ஒன்றான கைகள் நாம் அன்றாட பணிகளைச் செய்வதற்கு மிகவும் பயன்படுகிறது. கைகளின் உதவி இல்லாமல் நாம் எந்தவொரு செயலையும் செய்ய முடியாது. செயல்களுக்குரிய புலன்களில் கைகளுக்கென்று தனி இடம் உண்டு. இறையுருவத்தை வணங்க, புஷ்பத்தை அள்ளிச் சமர்ப்பணம் செய்ய கைகள் தான் உதவுகிறது. நாம் உள்ளங்கைகளைப் பார்க்கும் பொழுது இறைவனின் உருவங்கள், அபயவரத முத்திரைகளைத் தாங்கிய திருக்கரங்களுடன் காட்சி தருவதாக தோன்றும். இதனால் இறைவனின் உருவத்தின் பெருமைகளை கைகள் வெளிப்படுத்துகின்றன. எனவே கைகள் கடவுளுக்குச் சமமானது என வேதங்கள் சொல்கின்றது.

# அன்பால் உண்ண வைப்பாள் அன்னை

குழந்தை வளர்ப்பு தொடர்-2

M.உஷா குமாரபாளையம்

ஆரோக்கியமான உணவை குழந்தைக்குத் தர வேண்டுமென்று எண்ணும் தாய்மார்களுக்கு மிகச் சோதனையான கட்டம் ஸ்கூலுக்குக் குழந்தைகள் செல்வதற்கு முன் உள்ள முதல் நான்கு வருடங்கள் என்று கூறலாம்

பல் முளைக்கும்போது ஒருவிதமான பிரச்னை. முதலில் வந்த முன் பற்கள் விழும்போது மற்றொரு வகையில் பிரச்னை என எதிர்கொள்ள வேண்டிவரும். வளரும் நிலையில் உள்ள குழந்தைகள் எப்போதும் துறுதுறுவென்று ஓடிக்கொண்டே விளையாடிக்கொண்டே இருப்பதால் ஒரு இடத்தில் உட்கார வைத்து அவர்களுக்கு உணவு கொடுப்பது என்பது பெரிய விஷயமாக இருக்கிறது.



குழந்தைககளை உணவு உண்ண வைக்க, அக்குழந்தையின் பின்னாலேயே சென்று விதவிதமான விளையாட்டுக் காட்டி அவர்களுக்கே தெரியாமல் வாயில் உணவைத் திணிக்கும் தாய்மார்களே அதிகம். அப்படிச் செய்யாமல் எல்லோரும் உணவு உண்ண அமரும்போது குழந்தைகளையும் அவர்களோடு சாப்பிடப் பழக்க வேண்டும். அவர்களாகவே எடுத்துச் சாப்பிடும் பழக்கத்தை உண்டாக்க வேண்டும். ஒருவேளை, இரண்டு வேளை சரியாகச் சாப்பிடாவிட்டால் பரவா யில்லை. பசித்தால் தானே வந்து உட்கார்ந்து உண்ண வேண்டும் என்று அக்குழந்தை உணரும்படி தாய்தான் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு நாமே அதன் பின்னால் திரிந்து பழக்கப்படுத்திவிட்டு பிறகு வருந்தினால் பயன் இல்லை. அதே போல குழந்தையின் முதல் வருட வளர்ச்சியில் மூளை வளர்ச்சி மிக அதிகம். இரண்டிலிருந்து ஆறு வருடம் வரை ஒருவித நிதானமான எல்லா விதத்திலும் முழு வளர்ச்சி நடைபெறும். குழந்தை ஓடியாடி விளையாடுவதால் மட்டுமின்றி உடல் வளர்ச்சியும் நடைபெறுவதால் நல்ல ஊட்டச்சத்து மிகுந்த உணவு மிக மிக அவசியம் இப்போதைய கால கட்டத்தில் நான் கவனித்தவரை பலரும் அந்த நேரப் பசிக்கு குழந்தைக்குப் பிடித்ததை உண்ணட்டும் என்று மத்தியில் பிஸ்கட் சாக்லேட் கேக் போன்றவைகளைக் கொடுப்பது ஒரு ஃபாஷன் போல ஆகியிருக்கிறது. உணவு உண்ணும் இடைவேளையில் பசி எடுப்பதற்கு முன் இந்த மாதிரி கொடுத்தால் உணவு நேரத்தில் பசி எடுக்காமல் குழந்தை உண்ணவே உண்ணாது. இதனால் என்ன ஆகிறது? ஊட்டச்சத்துள்ள உணவிற்குப்பதில் வெறும் கொழுப்பும் சர்க்கரையும் மாவுச்சத்தும் மட்டுமே சேருகிறது;

புரதச்சத்து சரியான அளவு கிடைக்காவிடில் எலும்பின் வளர்ச்சியும்; திசுக்களின் வளர்ச்சியும் குறையும். நல்ல உயரம் திடம் வர வேண்டிய நேரத்தில் கொழுப்புச் சத்து மட்டும் சேர்த்தால் என்ன ஆகும்?

> **“குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்க கற்றுக்கொள்கிறது...**
> **அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக்கொள்கிறது...**
> **கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வளர்கிறது...**
> **அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளி ஆகிறது...**
> **ஊக்குவிக்கப்படும் குழந்தை மன திடம் பெறுகிறது.**
> **புகழப்படும் குழந்தை பிறரை மதிக்க கற்றுக் கொள்கிறது...**
> **நேர்மையை கண்டு வளரும் குழந்தை நியாயத்தை கற்றுக்கொள்கிறது...**
> **பாதுகாக்கப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது...**
> **நட்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்க கற்றுக்கொள்கிறது...”**

ஆரோக்கியம் குறையும். நோய் எதிர்ப்புச் சக்தி குறையும். எதிலெல்லாம் புரதச்சத்து இருக்கிறது என்று கேட்கிறீர்களா? முழுப்புரதம் என்றால் பால் மற்றும் அசைவ உணவுகளான முட்டை மீன் கோழி. மாமிசம் போன்றவற்றில் உள்ளது. அதுவே சைவ உணவு உண்பவர்களாயிருந்தால் முழுப்பயறு வகைகள் சோயா. கோதுமைத் தவிடு. பருப்பு வகைகள் ஜீல் இருந்தாலும் அதோடு தானியங்கள் சேரும்போது முழுப்புரதம் கிடைக்கிறது. அதனால் இட்லி முதல் பொங்கல் கிச்சடி வரை எல்லாமே சத்தானவைதான்.

# அற்புத மூலிகைகளின் மலை

## சுற்றுலாத் தலங்கள்

**கடந்த இதழில் கொல்லிமலையின் வரலாற்று சிறப்புகளைக் குறித்து கண்டோம்... இவ்விதழில் மலையின் சுற்றுலாத் தலங்கள் குறித்து காண்போம்.**

கொல்லி மலையில் (சதுரகிரியில்) எழுந்தருளியுள்ள அறப்பளீசுவரப் பெருமான் மீது, அம்பலவாண கவிராயர் என்பவர் "அறப்பளீசுவர சதகம்" என்னும் அருமையான நூலைப் பாடியுள்ளார். அதன் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் 'சதுரகிரி வளர் அறப்பளீசுர தேவனே' என்றமைத்துப் பாடியுள்ளமை சிறப்பிலும் சிறப்பு.

இத்தலம் சம்பந்தர், அப்பர் வாக்கில் இடம்பெற்றுள்ள வைப்புத் தலமாகும்.

உறையூரில் வாழ்ந்த பெருஞ்செல்வர் திரு. அருணாசல முதலியார் என்பவர், பல லட்சம் செலவில் திருப்பணிகள் செய்து இக்கோயிலில் கும்பாபிஷேகம் செய்வித்துள்ளார்.

**முருகன் கோவில் :** அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களில் பாடப்பெற்ற பழமை வாய்ந்த முருகன் கோவில் கொல்லி மலையில் அமைந்துள்ளது. இக்கோவிலில் முருகர் வேடர் தோற்றத்தில் காட்சியளிக்கிறார். சிவன், பார்வதி, விஷ்ணு, இடும்பன் மற்றும் விநாயகருக்கும் இங்கு ஆலயங்கள் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைத்திருக்கும் வாசலூர்பட்டி படகுத் துறை பார்க்கவேண்டிய இடமாகும். இந்த இடம் ஊட்டி தொட்டபெட்டா அளவிற்கு இல்லையெனினும் பார்க்க வேண்டிய இடமாகும்.

செம்மேட்டில் (செம்மேடு என்பது இவ்வனப்பகுதியில் மையமான ஊராகும்;) காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், மருத்துவமனை, நூலகம், தொலைபேசி நிலையம் முதலியன உள்ளது. 'வல்வில் ஓரி' மன்னனின் சிலை குதிரை மீதுள்ள 10 அடி உயரத்தில் அமைக்கப்பட்டு 1975-ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் ஆடி மாதம் 18ஆம் நாள் வல்வில் ஓரியின் நினைவாக 'வல்வில் ஓரி விழா' நடத்தப்படுகிறது. மலைவாழ் மக்கள் ஆடிப் பெருக்கு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

கொல்லி மலையில் இந்தியாவிலேயே பெரிய மூலிகைப் பண்ணை அரசாங்கத்தால் (வனத்துறையினர்) நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு தோட்டக் கலைத் துறையினரின் பண்ணையும் இம்மலைப் பகுதியில் உள்ளன.

கொல்லிமலை என்றாலே சுற்றுலா பயணிகளுக்கு நினைவுக்கு வருவது அங்குள்ள ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி. அதற்கு அடுத்தாற்போல் நினைவுக்கு வருவது அங்கு விளையும் பலா மற்றும் அன்னாசி பழங்கள் ஆகும்.

மலையில் உள்ள மண்வளம் மற்றும் நீர் வளத்தால் இங்கு விளையும் அன்னாசி பழம் மிகுந்த சுவையுடையதாக உள்ளது. அந்த பழத்துக்கு ஏற்றார் போல் சந்தையில் விலை கிடைத்து வருகிறது. இதனால் கொல்லிமலையில் உள்ள சோளக்காடு வாரச்சந்தையில் அன்னாசிபழம் அதிகமாக கிடைக்கிறது.

கொல்லிமலையில் அரியூர் நாடு மற்றும் குண்டூர் நாடு ஆகிய பகுதிகளில் தான் அன்னாசி அதிகம் விளைந்து வருகிறது. இந்த மலையில் அதிக முட்களுடன் காணப்படும் நாட்டு ரக அன்னாசியும், முட்கள் இல்லாமல் காணப்படும் கியூ ரக அன்னாசிகளும் விளைந்து வருகிறது. இதில் கியூ ரக அன்னாசி பழங்கள் ஜூஸ் தயார் செய்வதற்காக தொழிற்சாலைகளுக்கும், மற்ற பழங்கள் வெளி மாவட்ட விற்பனைக்கும் அனுப்பப்படுகிறது.

இதில் சிறு ரக அன்னாசி, நாட்டு ரகம், கியூ அன்னாசி என்று ரகங்கள் பிரித்து விற்பனை சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. சோளக்காடு வாரச்சந்தை ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் வெள்ளிகிழமைகளில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் ஊட்டி, கொடைக்கானலில் தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.















அதை போல கொல்லிமலை வாசலூர்பட்டியில் ரூ.62 லட்சம் மதிப்பீட்டில் தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த தாவரவியல் பூங்காவில் 87 வகையான மூலிகைகள் இடம் பெற்றுள்ளது. பூங்காவின் நடுவில் குறுக்கும், நெடுக்குமாக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சிறுவர்கள் விளையாட்டு தளம், மூலிகைப் பண்ணை, ரோஜா தோட்டம், கண்ணாடி இல்லம் மற்றும் இயற்கை புல் தரைகள், மூங்கில் காடுகளின் தோற்றம் போன்றவை கண்ணை கவரும் வகையில் உள்ளது.

மேலும் 3 விதமாக பசுமை குடில்கள் சுற்றுலா பயணிகள் தங்கி ஓய்வெடுக்க ரூ. 24 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது. புலி குகை இல்லம், மூங்கில் படகு போன்ற அமைப்பில் ஒரு குடில், ஜப்பானிய முறையில் ஒரு இல்லம் தாவரவியல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது.

கொல்லிமலையில் காட்சி கோபுரம் (வியு பாயிண்ட்) அமைக்கப்பட்டுள்ளதை போல வாசலூர்பட்டி தாவரவியல் பூங்காவில் இருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் பூங்காவை இணைக்கும் வகையில் மிக உயரமான அளவில் ரூ. 6 லட்சம் மதிப்பில் காட்சி கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

காட்சி கோபுரம் அருகில் இயற்கை காட்சியை ரசிக்கும் வகையில் 2 மீட்டர் அகலத்தில் குறுக்கே நடைபாதையில் சுற்றுலா பயணிகள் செல்லும் வகையில் அமைக்கப்பட உள்ளது.

இந்த தாவரவியல் பூங்கா காட்சி கோபுரம் அருகே உள்ள இயற்கை காட்டில் மான்கள் சுற்றிவரும் வகையில் அமைக்கப்பட இருக்கிறது.

ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி

# பூஜைக்கு உகந்த மலர்கள்...









**பூஜைக்கு உகந்த பூக்கள்**

திருமாலுக்கு பவளமல்லி, மரிக்கொழுந்து துளசி

சிவன் - வில்வம் செவ்வரளி

முருகன் - முல்லை, செவ்வந்தி, ரோஜா

அம்பாளுக்கு - வெள்ளை நிறப்பூக்கள்

**பூஜைக்கு பயன்படாத பூக்கள்**

விநாயகருக்கு - துளசி

சிவனுக்கு - தாழம்பூ

அம்பாளுக்கு - அருகம்புல்

பெருமாளிற்கு - அருகம்புல்

பைரவர் - நந்தியாவட்டை,

சூரியனுக்கு - வில்வம்



# கபாலிகான் நியூஸ்

**ஆபிஸில் நுழைந்ததும் தீபாவளி ஸ்வீட் சாப்பிட்டுக் கொண்டே செய்திகளை சொல்ல ஆரம்பித்தார்.**

**தமிழக அரசின் நிர்வாகம் படிப்படியாக வழக்கமான நிலைமைக்கு வந்தாப்பல தெரியுதே...**

ஆமா அதுல வித்யாசம் இருக்கே... வழக்கமா முதலமைச்சர் ஜெயலலிதா பயன்படும் எதையும் பயன்படுத்த தயங்குவார். ஆனால் மூன்றாவது முறையாக ஆக்டிங் முதல்வராக பொறுப்பேற்ற ஓ.பி.எஸ். முதலமைச்சர் ஜெயலலிதா கோட்டையில் கார் நிறுத்துப்படும் இடத்தில் இப்போது ஓ.பி.எஸ். கார் நிறுத்தப்பட்டு இருக்கிறதாம்.

**டி.வி.ல அமைச்சர்கள், அதிகாரிகள் பேட்டி கொடுக்கிறார்களே..!**

முதலமைச்சர் இல்லையென்ற குறை எதிர்க்கட்சிகளால் சுட்டிக் காட்டப்படக்கூடாது என்பதற்காக நிர்வாகத்தின் மீதான நெருக்கமான பிடி சற்று தளர்ந்த மகிழ்ச்சியில் துறை சார்ந்த அறிவிப்புகளை அமைச்சர்களும் அதிகாரிகளும் தருகிறார்கள்.

**ஆனா, முதலமைச்சர் படத்தை முன்னாடி வைக்குறது நல்லாவா இருக்கு?**


அதுதான் கொஞ்சம் நெருடலா இருக்கு. அவர் படத்தை வைக்கச் சொல்லி அவர் எப்போதாவது உத்தரவிட்டாரான்னு தெரியலை. அல்லது அவர் படத்தை வைச்சு பேசினாதான் மக்கள் நம்புவாங்கன்னு நினைக்கறாங்களான்னு தெரியலை. அவர் படத்தை வைக்கறதை விட அவர் சொன்ன திட்டங்களை நிறைவேற்றினால்தான் மக்களுக்கு சந்தோஷம்.

**அது சரி.. தி.மு.க. தொண்டர்கள் மத்தியில ஏதோ கலக்கம் தெரியுதே...!**

ஆமாம். கடந்த 15 நாளா தங்கள் தலைவர் பங்கு பெறும் நிகழ்ச்சியோ அல்லது அவரை சந்திக்கும் புகைப்படங்கள் செய்தி ஒளிபரப்பிலோ காணாமல் கலங்கி போய் உள்ளனர். அவர் வழக்கமாக சாப்பிடும் மருந்தினால் அலர்ஜி ஏற்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதால், யாரும் அவரை சந்திக்க வேண்டாமென்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிக்கை வெளியானதைக் கண்டு குழம்பி போய் உள்ளனர். ஏற்கனவே முதலமைச்சர் மருத்துவமனையில் இருக்கிறது பெரிய விஷயமா பேசப்படும்போது நம்ம தலைவர் உடல்நிலையும் இப்படி ஆயிடுச்சேன்னு வருத்தப்படுறாங்க... “எங்களை கேலி செஞ்சீங்கள்ள இப்ப பாத்தீங்களா ஆண்டவன் உங்களை தண்டிச்சுட்டான்னு” வாட்ஸ் அப் ல அ.தி.மு.க. காரங்க போட்டுத் தாக்குறாங்க.

**இடைத்தேர்தல் எப்படி?**

தி.மு.க. சார்பிலும், அ.தி.மு.க. சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்பு தேர்தல் ரத்தாகும்போதே ஏற்கனவே என்ன காரணத்துக்காக தேர்தல் தள்ளி வைக்கப்பட்டதோ மீண்டும் அவர்களையே வேட்பாளர்களாக அறிவிப்பதா’ன்னு கேஸ் போட்டுருக்காங்க... ஒரு வழக்கு தள்ளுபடி ஆயிடுச்சு இன்னொரு வழக்கு விஷயமா நோட்டீஸ் போயிருக்கு. அது எப்படி இருந்தாலும், அ.தி.மு.க., தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுகிறது. அம்மா இல்லாதப்ப ஜெயிச்சு காட்டனும்னு அ.தி.மு.க.வும், அந்தக் கட்சியை இந்த நேரத்துல தோக்க அடிக்கணும்னு தி.மு.க.வும் கங்கணம் கட்டிக்கிட்டு வேலை செய்யுறாங்க. மக்கள்



நலக்கூட்டணி தேர்தல புறக்கணிச்சுடுச்சு... பா.ஜ.க., பா.ம.க. சார்பல வேட்பாளர்களை நிறுத்துறாங்க... அடுத்த மித்ரா டைம்ஸ் வரதுக்குள்ள ரிசல்ட் வந்துடும் அப்ப தெரியும் யார் ஜெயிக்கிறாங்கன்னு...

**தமிழக நிர்வாகத்தை மத்திய அரசு ஆட்டிப் படைக்குதாமே...அப்டியா?**

ஆமாம். அது சைலண்ட் கிள்ளிங் அடிப்படையில் நடக்குது. முதலமைச்சர் ஜெயலலிதா இல்லாத சூழ்நிலையை பயன்படுத்தி ஜி.எஸ்.டி.மசோதா, புது கல்விக் கொள்கை'ஆகிய திட்டங்களை நிறைவேற்றலாம்னு முயற்சி நடக்குது. மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை ஓ.பி.எஸ். வழியா மத்திய அரசு ரூட் போடுதாம்.

சசிகலா ரியாக்ஷன்?

மத்திய அரசை பகைச்சுக்க வேணாம்னும் அதை எப்படி எதிர் கொள்றதுன்னு எம்.என். மூலமா வேற ரூட் போடுறாங்களாம். எம்.என். திருநாவுக்கரசர் நண்பர். திருநாவுக்கரசர் தமிழக காங்கிரஸ் தலைவர். அவர் முயற்சியால ராகுல்காந்தி ஜெயலலிதாவை வந்து பார்த்துட்டு போறார். இது தனி ரூட்.

புரியுது புரியுது... உங்க ரூட் என்ன?

இப்ப நான் ஜூட் என்று எஸ்கேப் ஆனார் கபாலிகான்.

# பெட்ரோல் விலை இந்தியாவில் மட்டும் அதிகம் ஏன்?

*பெட்ரோல் விலை உலக நாடுகளில் : பாகிஸ்தான் ரூ. 26.00, பங்களாதேஷ் ரூ. 22.00, க்யுபா ரூ. 9.00, இத்தாலி ரூ. 14.00, நேபாளம் ரூ. 34.00, பர்மா ரூ. 30.00, ஆப்கானிஸ்தான் ரூ. 36.00, ஸ்ரீலங்கா ரூ. 34.00 ஆனால்... இந்தியாவில் ரூ. 68.00 அடிப்படை விலை லிட்டருக்கு ரூ.16.50, மத்திய வரி 11.80, கலால் வரி 11.80 செஸ் வரி 4.00, மாநில வரி 8.00, ஆக ரூ. 50.05 + 18.00 = மொத்தம்: ரூ. 68.00, இந்த ரூ. 18.00 யாருக்கு எங்கே போகிறதோ??*





# ரூ.4700 கோடியில் அம்பானியின் வீடு

**4 இலட்சம் சதுர அடியில்.. 27 மாடிகளாக.. 9 லிஃப்ட் வசதியுடன்.. 3 ஹெலிகாப்டர் இறங்கு தளம், 1 ஆடம்பர சினிமா தியேட்டர், 1 ஆடம்பர உடற்பயிற்சிக் கூடம், 1 பூங்கா, 168 கார் பார்க்கிங், 600 அறைகள், 600 வேலையாட்கள், உலகத்திலேயே மிகப்பெரிய மிகவும் வசதி படைத்த மிகுந்த பண, பொருட்செலவில் உருவான தனி நபர் வீடு.. மொத்த விலை ரூ. 4700 கோடி மட்டுமே.**

**கடந்த மாதம்தான் தனது குடும்பத்தோடு குடியேறினார். முதல் மாத மின் கட்டணம்..**

**அதிகமில்லை.. வெறும் 71 இலட்சம் மட்டுமே!**

# ஐப்பசி அன்னாபிஷேகம்



கல்லுக்குள் தேரைக்கும், கருப்பை உயிற்கும் உள்ளுணர்வே தரும் தயாபரன் சிவன். அந்த லிங்கத் திருமேனிக்கு ஐப்பசி மாதம் பௌர்ணமி அன்று ஆண்டுதோறும் அன்னாபிஷேகம் உலகமெங்கும் நடைபெறும். கோவில்களிலும், இல்லங்களிலும் லிங்கத் திருமேனி மூழ்கும் வண்ணம் சூடாறிய வெள்ளை அன்னத்தைக் கொட்டி மூடி, வெந்த காய்கறிகள், பழங்கள், பட்சணங்கள் ஆகியவற்றை அடுக்கி லிங்க முகத்தையும் அழகுபடுத்துவார்கள்.

ஒவ்வொரு அன்னப் பருக்கையும் சிவரூபமாக இருப்பதாகப் பேரூர் புராணம் தெரிவிக்கிறது. எனவே இந்த அன்னாபிஷேக சிவனை ஒரு முறை தரிசித்தால் கோடி சிவ தரிசனம் செய்த பலன் ஏற்படும் என்பது ஐதீகம். இந்த அன்னச் சிவரூபத்திற்கு தீபாராதனை காண்பித்த பின்னர், சிவன் மேல் பூசிய அன்னம் பிரசாதமாகப் பக்தர்களுக்கு வழங்கப்படும். வெள்ளை அன்னம் சாப்பிடக் கூடாது என்பதால், இந்த அன்னப் பிரசாதம், சாம்பார், தயிர், மோர் ஆகியவற்றுடன் தனித்தனியே கலக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.


## மித்ரா டைம்ஸ்
மாத இதழ்

மித்ரா 2 அக்டோபர் 2016 டைம்ஸ் 5

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தியாசிரியர்
**தம்பி முருகானந்தம்**
9381788645

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
**திண்டுக்கல் முபாரக்**
**சேலம் பிரவீன்குமார்**
**திருப்பூர்** R. **அருண்**

**வடிவமைப்பு**
**மித்ரா டிசைன்ஸ்** 23743007

விற்பனை, விளம்பரம், சந்தா
23743007/8



## அலுவலக முகவரி
602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,23743007/8
**Whatsapp No. 9841843773**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

FEEL SECURE UNDER OUR SECURITY SERVICES

# MITRA SECURITY SERVICES (P) LTD

**Now a days ...**

**It must be very more important Safety & Security.**

**Whether it was...**

- **FACTORY**
- **OFFICE**
- **FLAT & BUILDINGS**

**We are provide 'SECURITY'**

**Our security firm insist**

- ♦ **Safety**
- ♦ **Security**
- ♦ **Reliablity**
- ♦ **Responsibility**
- ♦ **Reasonablity**




## *MITRA SECURITY SERVICES(P)LTD*

001, Ground Floor, Inchakkal Block, Chitra Avenue,
9 Choolaimedu High Road, Chennai - 94

✉ : mitrasecurityservices@india.com ☎: 044-23743662 cell : 7358446944

# KRM ENCLAVE




# சென்னை நெருக்கடியில் சிக்கித் தவிப்பவரா நீங்கள்?

சென்னை வளர்ந்துவிட்ட ஒரு நெருக்கடியான நகரம். எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் மட்டுமே வசிப்பார்கள். ஆனால் சென்னை மாவட்டத்தில் அனைத்து மாவட்ட மக்களும் வசிக்கிறார்கள். இலட்சக்கணக்கில் தினந்தோறும் வேலையின் பொருட்டு திருவள்ளூர், வேலூர், காஞ்சிபுரம், தர்மபுரி, திருவண்ணாமலை என பல்வேறு வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருகிறார்கள். இதுபோக தி.மு.க. ஆட்சியில் சென்னையில் தலைமைச் செயலகத்தை விரைந்து கட்டி முடிக்க வெளிமாநிலத்தைச் சார்ந்தவர்களை வேலைக்கு அழைத்து வந்தனர். அவர்கள் இங்கேயே தங்கி விட்டதாலும் அவர்களுடைய உறவினர்கள் தினந்தோறும் சென்னைக்கு படையெடுத்து வருவதாலும் சென்னை மாநகரம் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதிலிருந்து விடுபட சென்னைக்கு அருகில் ரெட்டேரி என்ற இடத்தில் அமைந்துள்ள அழகிய நகருக்குள் ஓர் சுற்றுலாத் தலம். இங்கு ஒரு பிளாட் வாங்குவதே புத்திசாலிதனம்.

உங்களின் கனவு இல்லமாக நம்முடைய KRM Home Makers Pvt.Ltd., மூலமாக ஒரு பிளாட் வாங்கலாம். தொடர்புக்கு : 23743007/8

**E-mail : msmoorthy68@yahool.co.in** **Website : www.mitrahomemakers.com**